www.penakural.com

மலர்: 03 இதழ்: 05 மார்ச் 2025 Vol.: 03 Issue: 05 March 2025 ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்

Scan and visit the website



வனஉயிரினப் பாதுகாப்பு முயற்சிகளுக்கு

## பிரதமர் பாராட்டு!



## தமிழ் வளர்ச்சிக்காக திமுக என்ன செய்தது?

அன்புமணி ராமதாஸ் குற்றச்சாட்டு!

பெண்மையை போற்றும் தமிழ்நாடு அரசு

உலக மகளிர் தின விழா 2025-ல்





பெண்களுக்கு சூப்பர் திட்டங்கள்..

மு.க.ஸ்டாலினின் அறிவிப்பு!



தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine Re - work
High Quality
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

# பேனா குரல்

**PENA KURAL** தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 03 இதழ்: 05 மார்ச் 2025

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : **N V சிவசங்கர்**
ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,
கௌரவ ஆசிரியர் : **K.ராமசுப்ரமணியன்**
இணை ஆசிரியர் : **K.ரமேஷ்குமார்**

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், வீ.அய்யனார், பி.ஸ்டாலின், P.கார்த்திகேயன்**

தலைமை நிருபர்கள்:
**B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், L.குமரேசன்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், K.கலைமணி, அன்புமணி, தமிழ் வீரன், D.பாமா, D.ராஜேஷ், S.ஜெயராஜ், ஜெபசீலன், K.மாரிதுரை, A.சரவணன்**

புகைப்பட நிருபர்:
**V.கவியரசன்**

சட்ட ஆலோசகர்கள்:
**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. சத்தியநாராயணன்**, B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123

நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 8754582123
info@penakural.com
news@penakural.com
www.penakural.com


பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் வாசகங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *

# தங்கத்தின் தேவைகள் அதிகரித்துள்ளதா?

எதிர்காலப் பொருளாதாரத் தேவைகளுக்காக, நிகழ்கால வருமானத்திலிருந்து ஒரு பகுதியை சேமிப்பவர்கள், அந்தச் சேமிப்பின் ஒரு பகுதியைத் தங்கத்தில் முதலீடு செய்கின்றனர். நிறுவனப் பங்குகள், கடன் பத்திரங்கள், ரியல் எஸ்டேட் தவிர, செல்வந்தர்களின் முதலீடுகளில், தங்க முதலீடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விவசாயிகள், அறுவடைக் கால வருமானங்களின் ஒரு பகுதியைத் தங்கம் வாங்குவதற்காக ஒதுக்குகின்றனர்.

பொருளாதார நெருக்கடி தருணங்களில், தங்க நகைகளை, வங்கிகள் மற்றும் அடகுக் கடைக்காரர்களிடம் அடமானம் வைத்து, எளிதாகக் கடன் பெற முடியும் என்பது, இந்த உலோகம், பலதரப்பினராலும் விரும்பப்படுவதற்கும், வாங்கப்படுவதற்கும் ஒரு முக்கியக் காரணியாகும். மேலும், பணவீக்கத்திற்கு எதிரான முதலீட்டு சாதனங்களில் ஒன்றாக தங்கம் கருதப்படுகிறது.

இந்தியாவைவிட, தென் ஆப்பிரிக்கா 60 மடங்கும், கனடா 22 மடங்கும், ஆஸ்திரேலியா 5 மடங்கும், தங்கத்தை உற்பத்தி செய்கின்றன. இந்நாடுகளில், தங்கத்துக்கான தனி நபர் தேவை அதிகம் இல்லாததால், அவற்றில் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நாடுகளின் அன்னியச் செலாவணியின் வரவுக்கு வழிவகுக்கின்றன. இந்தியாவை விட, பத்து மடங்கு ஜி.டி.பி. வலுப்பெற்றிருக்கும் அமெரிக்காவின் தங்கத்திற்கான தேவை, இந்தியத் தேவை அளவில் பத்தில் ஒரு பகுதிதான்.

ஆண்டுதோறும், தங்கத்துக்கான உலக மொத்தத் தேவைகளில், மூன்றில் ஒரு பங்கு இந்தியாவுக்கானதாகும். சமீபத்திய புள்ளி விவரப்படி, தங்கத்துக்கான தேவையில், முன்னணியில் இருந்த சீனாவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இந்தியா முதல் இடத்திற்கு முன்னேறி உள்ளது. சீனாவின் தேவை, கடந்த ஓராண்டில், 38 சதவீதம் குறைந்துள்ளதே இதற்குக் காரணமாகும்.

உலகப் பொருளாதார நிலவரம், அமெரிக்க டாலரின் பலம் மற்றும் பலவீனம், இந்திய ரூபாயின் மதிப்பு, போர்மூட்ட சூழ்நிலை, மத்திய வங்கிகளின் தங்கக் கொள்முதல் நடவடிக்கை போன்றவை, தங்கத்தின் சர்வதேச விலையை நிர்ணயிக்கும் சில முக்கியக் காரணிகளாகும்.

நல்ல முதலீடு என்பது, அதன் விலை ஏற்ற இறக்கங்களின் காரணிகள், எல்லா வகையான முதலீட்டாளர்களாலும், எளிதாகப் புரிந்து கொள்ளும்படியாக அமைதல் வேண்டும். முதலீட்டின் அடிப்படை மதிப்பு முற்றிலும் பாதுகாக்கப்படவேண்டும்.

ஆனால், தங்கத்தின் விலை, மேலே கூறியுள்ளபடி, சாமானிய மக்கள் புரிந்து கொள்ளமுடியாத பல சர்வதேசச் சந்தை நிகழ்வுகளைச் சார்ந்திருக்கிறது. தற்போதைய சூழ்நிலையில், தங்க முதலீடுகள் பெரும்பாலும், பண பரிவர்த்தனை மூலமே செய்யப்படுகின்றன. கருப்புப் பண உலக இயக்கத்தில், தங்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது. அத்தியாவசிய இறக்குமதி பொருள்களின் விலை ஏற்றங்கள் மீண்டும் தலை தூக்கும்போது, நிலைமையைச் சமாளிக்கும் திறமையை நாம், இப்பொழுதிலிருந்தே வளர்த்துக்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

– ஆசிரியர்

# 25 மருத்துவமனைகளில் போதை மீட்பு சிகிச்சை, மறுவாழ்வு மையங்கள்: முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்தார்




ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் காக்கும் தமிழ்நாடு மாநில கொள்கை-யினை வெளியிட்டு, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.15.81 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 25 ''கலங்கரை'' ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 27-02-2025 அன்று திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 27-02-2025 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் காக்கும் தமிழ்நாடு அரசு கொள்கையை வெளியிட்டார். மேலும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 15 கோடியே 81 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 25 ''கலங்கரை'' ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை திறந்து வைத்தார்.

ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் காக்கும் தமிழக அரசு கொள்கை: இக்கொள்கையில், ஆதரவற்று பொது இடங்களில் உலாவும் மன நோயர்களை அடையாளம் கண்டு மீட்பது உள்ளிட்ட பல்வேறு சேவைகளில் 'பயனாளிகளின் நலனை மையமாகக் கொண்ட, அவர்களின் உரிமைகளை முன்னிலைப்படுத்திய அணுகுமுறை மற்றும் அரசு துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பின் வழியாக' முழுமையான மனநல மருத்துவ சேவைகள் வழங்குவது குறித்த நெறிமுறைகள் மற்றும் இச்சேவையில் பங்காற்றக்கூடிய பல்துறை அலுவலர்களின் பொறுப்புகள் தொடர்பான விரிவான வழிமுறைகளை தெளிவுபடுத்துகிறது.

ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர சிகிச்சை, இடைநிலை மருத்துவ கவனிப்பு, நீண்ட கால பராமரிப்பு, மறுவாழ்வு மற்றும் சமூகத்துடன் மீண்டுமிணைதல் உள்ளிட்ட நான்கு நிலைகளிலான கவனிப்பை இக்கொள்கை வரையறுக்கிறது. மனநல சிகிச்சை முடிந்து குணமடைந்த ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களை கண்டறிந்து, அவர்களை குடும்பத்துடன் மீண்டும் சேர்த்து வைக்கவும், குடும்பத்துடன் மீண்டுமிணைய சாத்தியமில்லாதவர்களுக்கு தேவையான நல்லாதரவையும் பாதுகாப்பையும் வழங்க வலியுறுத்துகிறது.

இடைநிலை கவனிப்புக்கு பின்னாலான நீண்ட கால பராமரிப்பு மற்றும் சமூகத்துடன் மீண்டுமிணைதல் தொடர்பான மறுவாழ்வு சேவைகள் பற்றி இக்கொள்கை விளக்குகிறது. இச்சேவைகளை செயலாக்கத்துக்கு கொண்டு வருவதை மாநில அளவில் மேற்பார்வையிட மாநில மனநல ஆணையத்திற்கும், மாவட்ட அளவில் கண்காணிக்க மாவட்ட மனநல குழுவுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வகையில், ஆதரவற்ற மனநோயர்கள் நோயில் இருந்து மீண்டு, நலம் பெற்று சமூகத்தில் மதிப்புமிகு உறுப்பினர்களாக வாழத் தேவையான திட்டங்களையும், சேவை வழங்குவோரின் பொறுப்புகளையும் உள்ளடக்கிய இக்கொள்கையை வெளியிடுவதன் மூலம், ஒருங்கிணைந்த மனநல மருத்துவ சேவைகளை வழங்கி, ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர் இல்லாத மாநிலமாக தமிழகத்தை திகழச் செய்ய அரசு உறுதியேற்றுள்ளது.

"கலங்கரை" ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள்: தமிழக அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் ஒருங்கிணைந்த போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு சேவைகளை வழங்கிட அரியலூர், தருமபுரி, ஈரோடு, திருவாரூர், கிருஷ்ணகிரி, மதுரை, சென்னை, தஞ்சாவூர், நீலகிரி, திருச்சி, திருநெல்வேலி, திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திண்டுக்கல், சேலம், திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்.

சென்னை, கிண்டி-கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கீழ்பாக்கம்-அரசு மனநல காப்பகம் ஆகிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 15.81 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 25 "கலங்கரை" ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை தமிழக முதல்வர் இன்றையதினம் திறந்து வைத்தார்.ஒவ்வொரு மையத்துக்கும் மனநல மருத்துவர் தலைமையில், ஆற்றுப்படுத்துநர், சமூகப் பணியாளர், செவிலியர், பாதுகாவலர், மருத்துவமனை பணியாளர், துப்புரவு பணியாளர் என ஆறு மனநல மருத்துவப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, தரமான சிகிச்சை வழங்கப்படும்.

அனைத்து மையங்களிலும் ஒரே வகையில் சிறப்பான சேவைகளை வழங்குவதற்காக 'நிலையான செயல் நடைமுறைகள்' வரையறுக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மற்றும் உளவியல் சிகிச்சை முறைகள், மூச்சுப் பயிற்சி, உடற்பயிற்சி சேவைகள், பொழுதுபோக்கு வசதிகள், உள்ளரங்க விளையாட்டு குழு சிகிச்சை, குடும்பத்தினருக்கான ஆலோசனைகள் உள்ளிட்ட மறுவாழ்வு சேவைகளும் வழங்கப்படும். இம்மையங்களில் போதைப் பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் குடும்பத்தினரின் ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டோடு போதை மீட்பிற்கான தொடர் சிகிச்சை எவ்வித கட்டணமும் இன்றி வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ப. செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண் தம்புராஜ், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி ஆகியோர் கலந்து கொண்டனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- M. திலீப் குமார்

# மகா கும்பமேளா 2025: நம்பிக்கை, ஒற்றுமை, பாரம்பரியத்தின் சிறப்பு!



2025 ஜனவரி 13 முதல் பிப்ரவரி 26 வரை நடைபெற்ற மகா கும்பமேளா புனிதமான மாபெரும் விழாவாகும். உலகின் பிரமாண்டமான, அமைதியான, ஒன்று கூடல், கோடிக்கணக்கான பக்தர்களை ஒருங்கிணைத்தது. தங்களின் பாவங்களை நீக்கி ஆன்மீக விடுதலைப் பெறுவதற்குபக்தர்கள் புனித நதிகளில் நீராடினார்கள். கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் ஒன்று கூடும் இடமான திரிவேணி சங்கமத்தில் இந்தப் புனித நீராடல் நடைபெற்றது. 45 நாட்களில், 45 கோடி பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டதைவிட பக்தர்களின் வருகை அதிகரித்து நிறைவு நாளில் 66 கோடியை எட்டியது.

மகா கும்பமேளாவில் திரிவேணி சங்கமம் தவிர அனுமன் கோவில், அலோபி தேவி ஆலயம், மங்கமேஸ்வர் கோவில் போன்ற தொன்மையான கோவில்களும், அசோகர் ஸ்தூபி, அலகாபாத் பல்கலைக்கழகம், சுவராஜ் பவன் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் யாத்ரீகர்களைக் கவர்ந்தன. மத்திய கலாச்சார அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட காலாகிராம் எனப்படும் கலாச்சாரக் கிராமம் இந்தியாவின் வளமான பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது. கைவினைப் பொருட்கள், பாரம்பரிய உணவுப் பொருட்கள், கலை, கலாச்சார நிகழ்வுகள், கண்காட்சிகள் போன்றவை இங்கு இடம் பெற்றிருந்தன.

துறவிகளின் முகாம்களில், தியானம், விவாதங்கள், தத்துவ உரையாடல்கள் ஆகியவை இடம்பெற்றன. யாத்ரீகர்களுக்கு உரிய தகவல்களை அவ்வப்போது வழங்குவதற்கு டிஜிட்டல் தொடர்பு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. உத்தரப்பிரதேச அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ட்ரோன் அணிவகுப்பு வானத்தில் விதவிதமான வடிவங்களை உருவாக்கி பக்தர்களை மெய்மறக்கச் செய்தது.

மகா கும்பமேளாவை முன்னிட்டு பிப்ரவரி 7 முதல் 10-ஆம் தேதி வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை, நட கலை நிகழ்ச்சிகளில் பிரபல கலைஞர்கள் கலந்து கொண்டு பக்தர்களுக்கு கலாச்சார விருந்தை சமர்ப்பித்தனர். பாவங்களைப் போக்கவும் மோட்சத்தை அடையவும் வழி வகுப்பதாக நம்பப்படும் ஷாஹி ஸ்னான் என்னும் முக்கிய சடங்கை முன்னிட்டு லட்சக்கணக்கானவர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார்கள். புனித கங்கை நதிக்கு ஒளிரும் விளக்குகளை காணிக்கையாக்கி வழிபடும் உலகப் பிரசித்தி பெற்ற கங்கை ஆரத்தி, திரளான பக்தர்களுக்கு மறக்க முடியாத அனுபவத்தை வழங்கியது.

ஆயிரக்கணக்கான தங்கும் விடுதிகள், கூடாரங்களை அமைத்து மகா கும்பமேளா நடைபெற்ற பகுதி, தற்காலிக நகரமாக மாற்றி அமைக்கப்பட்டிருந்தது. அலைகடலென திரண்டு வந்திருந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கும்பமேளா பகுதியைச் சுற்றி சுமார் 2000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, உயர்தர சிகிச்சைகள் வழங்கப்பட்டன. செயற்கை நுண்ணறிவால் இயக்கப்பட்ட கண்காணிப்பின் வா-யிலாக கும்பமேளா பகுதி முழுவதும் ஏழடுக்கு பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. துணை ராணுவப் படையினர், 14,000 ஊர்க்காவல் படையினர்

உட்பட 50,000 பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்ததுடன், 2,750 செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன.

தடையற்ற போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பை உறுதி செய்ய பிரயாக்ராஜ் மற்றும் அதை ஒட்டிய பிராந்தியங்களில் முன் எப்போதும் இல்லாத வகையில் பக்தர்களின் வருகையைக் கையாள இந்திய ரயில்வே பாரிய செயல்பாட்டு, உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் பல்வேறு முக்கிய பகுதிகளில் இருந்து பிரயாக்ராஜிற்கு தேவைகளின் அடிப்படையில் ஏறத்தாழ 1000 ரயில்கள் இயக்கப்படுகின்றன. ரயில்வே பாதுகாப்புப் படை (ஆர்.பி.எஃப்) மற்றும் அரசு ரயில்வே காவல்துறை (ஜி.ஆர்.பி) ஆகியவற்றைச் சேர்ந்த 10,000 க்கும் மேற்பட்ட வீரர்கள் முக்கிய நிலையங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ட்ரோன்கள், உயர்தர தொழில்நுட்பத்திலான கண்காணிப்பு கேமராக்கள், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முன்னறிவிப்பு மாதிரிகள் போன்றவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்தியக் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், உத்தரப்பிரதேச ஆளுநர் திருமதி ஆனந்திபென் படேல், உத்தரப்பிரதேச முதல்வர் திரு யோகி ஆதித்யநாத், மற்றும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், திரு அர்ஜுன் ராம் மேக்வால், திரு ஸ்ரீபாத் நாயக் போன்ற மத்திய அமைச்சர்கள் கும்பமேளாவில் கலந்து கொண்டு புனித நீராடினார்கள். மாநில முதலமைச்சர்களான திரு பஜன் லால் சர்மா (ராஜஸ்தான்), திரு நயப் சிங் சைனி (ஹரியானா), திரு என் பிரேன் சிங் (மணிப்பூர்), திரு பூபேந்திர படேல் (குஜராத்) ஆகியோரும் பங்கேற்றார்கள். டாக்டர் சுதான்ஷு திரிவேதி, திரு அனுராக் தாக்கூர், திருமதி சுதா மூர்த்தி, திரு ரவி கிஷன் முதலிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் மகா கும்பமேளாவில் கலந்து கொண்டனர். இவர்களுடன், விளையாட்டு வீரர்களான சாய்னா நேவால், சுரேஷ் ரெய்னா, காளி என்ற தலிப் சிங் ராணாவும், பிரபல கவிஞரான குமார் விஷ்வாஸ், பிரபல நடன இயக்குனர் ரெமோ டி'சோசா, இந்தி திரைப்பட நடிகைகள் கத்ரீனா கைஃப், ரவீனா டாண்டன் ஆகியோரும் திரிவேணி சங்கமத்தில் நீராடினார்கள்.

புனித நிகழ்வு முடிவுக்கு வந்தாலும், பக்தி மற்றும் மகத்துவத்தின் எதிரொலிகள் வரலாற்றில் ஒரு நீங்காத முத்திரையை விட்டுச் செல்கின்றன.

- N V **சிவசங்கர்**

# இளையராஜாவுக்கு அன்புமணி ராமதாஸ் வாழ்த்து!

பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இசையுலக சாதனைகளின் உச்சமாக லண்டனில் வேலியண்ட் என்ற தலைப்பில் சிம்பொனி இசையை இசைக்கடவுள் இளையராஜா அரங்கேற்றியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அளிக்கிறது. இதற்காக அவருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இளையராஜாவின் இசை வரலாற்றில் உச்சங்களுக்கு வரம்பு எதுவும் கிடையாது. ஒவ்வொரு முறை உச்சத்தை அடையும் போது அடுத்த இலக்கை நோக்கி வெற்றிகரமாக முன்னேற்றுவது தான் அவரது இயல்பாக இருந்திருக்கிறது. இன்றைய நிலையில் சிம்பொனி சாதனை அவரது உச்சமாக இருந்தாலும் இனிவரும் காலங்களில் அவர் மேலும் பல உச்சங்களை அடைவார். அதற்காக அவருக்கு வாழ்த்துக்கள்! என்று கூறியுள்ளார்.

- V. **அய்யனார்**

# வனஉயிரினப் பாதுகாப்பு முயற்சிகளுக்கு பிரதமர் பாராட்டு!

## வனவிலங்குகளுக்கான தேசிய வாரியத்தின் 7வது கூட்டம் மார்ச் 3ம் தேதி கிர் நகரில் பிரதமர் தலைமையில் நடைபெற்றது



குஜராத்தில் உள்ள கிர் தேசியப் பூங்காவை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பார்வையிட்டார். அங்கு தேசிய வனஉயிரின வாரியத்தின் 7-வது கூட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் வனவிலங்கு பாதுகாப்பிற்காக மத்திய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளை தேசிய வனஉயிரின வாரியம் மதிப்பாய்வு செய்தது. புதிய பாதுகாக்கப்பட்ட பகுதிகளை உருவாக்குவதில் படைக்கப்பட்டுள்ள சாதனைகள் மற்றும் புலிகள் சரணாலயம், யானைகள், பனிச்சிறுத்தைகள் பாதுகாப்புத் திட்டம், போன்ற முதன்மையான திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. டால்பின்கள் மற்றும் ஆசிய சிங்கங்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள், சர்வதேச அளவில் சிறுத்தை பாதுகாப்புக்கான கூட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் போது, நாட்டில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆற்று டால்பின் கணக்கெடுப்பு அறிக்கையைப் பிரதமர் வெளியிட்டார். இந்த அறிக்கையின்படி மொத்தம் 6,327 ஆற்று டால்பின்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த முன்னோடி முயற்சியில் எட்டு மாநிலங்களில் உள்ள 28 நதிகளில் உள்ள டால்பின்களை கணக்கெடுக்கும் பணியும் அடங்கும். 3150 மனித நாட்கள், 8,500 கிலோமீட்டருக்கும் அதிகமான தொலைவிற்கு இந்தக் கணக்கெடுக்கும் பணி நடைபெற்றது. டால்பின்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை உத்தரப்பிரதேச மாநிலம் முதலிடத்திலும் அதைத் தொடர்ந்து பீகார், மேற்கு வங்கம், அசாம் மாநிலங்களும் உள்ளன.

டால்பின்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள உள்ளூர் மக்கள் மற்றும் கிராமவாசிகளை இந்தக் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபடுத்துவதன் வாயிலாக டால்பின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை அவர்களிடையே ஏற்படுத்த முடியும் என்று பிரதமர் வலியுறுத்தினார். டால்பின் வாழ்விடப் பகுதிகளில் பள்ளிக் குழந்தைகளை அழைத்துச் சென்று பார்வையிட ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கவும் அவர் அறிவுறுத்தினார்.

வனஉயிரின ஆரோக்கியம், நோய் மேலாண்மை தொடர்பான பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைப்பதன் வாயிலாக நிர்வாக மையமாகச் செயல்படும் ஜூனாகட்டில் வனவிலங்குகளுக்கான தேசிய பரிந்துரை மையத்தை அமைப்பதற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை குறித்த கணக்கெடுப்பு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை




மேற்கொள்ளப்படுகிறது. இந்தக் கணக்கெடுப்பு கடைசியாக 2020-ம் ஆண்டில் நடத்தப்பட்டது. 2025-ம் ஆண்டில் நடத்தப்படும் 16-வது சுற்று சிங்கங்கள் குறித்த கணக்கெடுப்புப் பணிகள் தற்போது தொடங்குகியுள்ளதாகப் பிரதமர் அறிவித்தார்.

ஆசிய சிங்கங்கள் தற்போது பர்டா வனவிலங்கு சரணாலயத்தை இயற்கைச் சூழலுடன் வசிப்பிடமாகக் கொண்டுள்ளதை கருத்தில் கொண்டு, அவற்றுக்கான இரைகள் கிடைக்கச் செய்வது, பிற வாழ்விட மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பர்டாவில் சிங்கங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று பிரதமர் அறிவித்தார். வனவிலங்கு வாழ்விடங்களின் மேம்பாடு, பாதுகாப்புக்கான வழிமுறையாக சூழல் அமைப்பு சுற்றுலாவிற்கான முக்கியத்துவத்தை அவர் சுட்டிக் காட்டினார். எனவே, சூழல் அமைப்பிற்கான சுற்றுலாவை எளிதாக்கும் வகையில், போக்குவரத்து இணைப்பு இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மனிதர்-வன உயிரின மோதல்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கு ஏதுவாக, கோவையில் உள்ள சலீம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்று மையத்தில் உள்ள (சாக்கோன்) இந்திய வனவிலங்கு நிறுவன வளாகத்தில் சீர்மிகு மையம் ஒன்று அமைக்கப்படும் என்ற அறிவிப்பைப் பிரதமர் வெளியிட்டார். மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் விரைவாக நடவடிக்கை எடுக்கும் வகையில், அது சார்ந்த குழுக்கள் மேம்பட்ட தொழில்நுட்பம், கண்காணிப்புக் கருவிகள், முன்கூட்டியே எச்சரிக்கை செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு இந்த மையம் ஆதரவளிக்கும். மனிதர்-வனவிலங்கு மோதல் ஏற்படும் பகுதிகளில் கண்காணிப்பு, ஊடுருவலைக் கண்டறிவதற்கான அமைப்புகளைப் பரிந்துரைத்தல், மோதல் தணிப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்த களப் பயிற்சியாளர்களுக்கு திறனை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



காட்டுத்தீ மற்றும் மனிதர்-விலங்கு மோதல்கள் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள தொலையுணர்வு, புவிசார் வரைபடம், செயற்கை நுண்ணறிவு, எந்திர கற்றல் ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். மனிதர்-வனவிலங்கு மோதலின் சவாலை எதிர்கொள்ள பாஸ்கராச்சார்யா தேசிய விண்வெளி பயன்பாட்டு நிறுவனத்தோடு இந்திய வனவிலங்கு நிறுவனம் இணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார்.

காட்டுத்தீ பரவல் குறித்த கண்காணிப்பு, மேலாண்மையை மேம்படுத்துவதற்கு குறிப்பாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட பகுதிகளில், முன்கூட்டியே கணித்தல், கண்டறிதல், தடுத்தல், கட்டுப்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்காக டேராடூனில் உள்ள இந்திய வன நில அளவை அமைப்பானது பாஸ்கராச்சார்யா தேசிய விண்வெளி பயன்பாடுகள் மற்றும் புவி-தரவு நிறுவனத்தோடு இணைந்து விண்வெளி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டும் என்று பிரதமர் அறிவுறுத்தினார்.

மத்தியப்பிரதேசத்தில் உள்ள காந்திசாகர் சரணாலயம் மற்றும் குஜராத்தில் உள்ள பன்னி புல்சமவெளி உள்ளிட்ட பிற பகுதிகளுக்கும் சிறுத்தைகள் அறிமுகம் செய்யப்படும் என்றும் பிரதமர் அறிவித்தார்.

புலிகள் காப்பகங்களுக்கு வெளியே புலிகளைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்ட ஒரு திட்டத்தையும் பிரதமர் அறிவித்தார். உள்ளூர் சமூகங்களுடன் சகவாழ்வை இந்த காப்பிடத்துக்கு வெளியில் உறுதி செய்வதன் மூலம் வனப்பகுதிகளில் மனிதர்-புலி மற்றும் பிற சக-வேட்டையாடும் மோதல்களைத் தடுப்பதற்கான முயற்சிகளை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கரியால் எனப்படும் மீன் உண்ணும் முதலை இனங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதைச் சுட்டிக்காட்டிய பிரதமர், அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், புதிய திட்டங்கள் தொடங்கப்படுவதாகவும் அறிவித்தார்.

கான மயில் பறவையினங்களைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு பிரதமர் பாராட்டுத் தெரிவித்தார். அவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, தேசிய அளவிலான கானமயில் பாதுகாப்பு செயல் திட்டத்தையும் அவர் அறிவித்தார்.



இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஆராய்ச்சி, மேம்பாட்டுப் பணிகளுக்காக வனங்கள் மற்றும் வனவிலங்குகளின் பாதுகாப்பு மேலாண்மை தொடர்பான இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் பாரம்பரிய அறிவு மற்றும் கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிக்குமாறு வாரியம், சுற்றுச்சூழல் அமைச்சகத்தை பிரதமர் கேட்டுக் கொண்டார். வனவிலங்கு பாதுகாப்புக்கான உத்திகள், எதிர்கால நடவடிக்கைகளுக்கான செயல்திட்டங்களை வகுப்பது குறித்து ஆலோசனை வழங்கிய பிரதமர், இந்திய கரடி, கரியால் முதலை, கானமயில் போன்ற அரியவகை வனவிலங்குகளின் பாதுகாப்பு, மேம்பாட்டில் பணியாற்ற பல்வேறு பணிக்குழுக்களை அமைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

சிங்கம், சிறுத்தை இனங்களின் பாதுகாப்புக்கு கிர் நதித் திட்டம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு என்று



பிரதமர் குறிப்பிட்டார். இந்தப் பாரம்பரிய அறிவை செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் பிற தேசிய பூங்காக்கள் மற்றும் சரணாலயங்களில் பயன்படுத்த ஆவணப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இடம் பெயரும் வன உயிரினங்கள் பாதுகாப்பு தொடர்பான ஐ.நா. சபை மாநாட்டின் கீழ் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் பிரதமர் ஆலோசனை தெரிவித்தார்.

இயற்கைப் பாதுகாப்பில், குறிப்பாக சமூக காப்பகங்களை உருவாக்குவதன் மூலம் உள்ளூர் சமுதாயத்தினர் தீவிரமாகப் பங்கேற்பதை பிரதமர் பாராட்டினார். கடந்த பத்தாண்டுகளில், இந்தியாவில் சமூக காப்பகங்களின் எண்ணிக்கை ஆறு மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது. வனவிலங்கு பாதுகாப்பில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

கால்நடை சுகாதார மேலாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கக்கூடிய வனப்பகுதிகளில் உள்ள மூலிகைகள் ஆராய்ச்சி, ஆவணப்படுத்துதல் குறித்தும் பிரதமர் ஆலோசனை வழங்கினார். உலக அளவில் கால்நடை சுகாதார மேலாண்மைக்கு தாவரம் சார்ந்த மருத்துவ முறைகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்திற்குப் பிறகு, முன்கள வனப் பணியாளர்களின் இயக்கத்தை மேம்படுத்துவதற்காக இருசக்கர வாகனங்களை பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். கிர் வனப்பகுதியில் உள்ள களப்பணியாளர்கள், சூழல் வழிகாட்டிகள், கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் அவர் கலந்துரையாடினார்.

- S. ராதிகா

## திருப்பத்தூர் மாவட்ட காவல் துறையில் கழிவு செய்யப்பட்ட காவல் வாகனங்கள் பொது ஏலம்!



திருப்பத்தூர் மாவட்ட காவல் துறையில் கழிவு செய்யப்பட்ட 12 காவல் வாகனங்கள் (08- இருசக்கர வாகனங்களும், 04 - நான்கு சக்கர வாகனங்களும்) உள்ளன. அந்த காவல் வாகனங்கள் தமிழ்நாடு அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி வரும் 20.03.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு திருப்பத்தூர் மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் பொது ஏலம் விடப்பட உள்ளது.

பொது ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள், நுழைவு கட்டணமாக ரூ.100/-ம், இருசக்கர வாகனத்திற்கு முன்பணமாக ரூ.500/-ம், நான்கு சக்கர வாகனத்திற்கு முன்பணமாக ரூ.1,000/-மும், செலுத்தி ரசீது பெற்று ஏலத்தில் கலந்து கொள்ளலாம். 16.03.2025 முதல் 18.03.2025 ஆம் தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை ஏலத்தில் கலந்து கொள்ள ரசீது வழங்கப்படும்.

மேலும், இருசக்கர வாகனம் ஏலம் எடுத்தவர்கள் ஏலத்தொகையையும், ஏலத்தொகையுடன் 12% (GST) சரக்கு மற்றும் சேவை வரியும், நான்கு சக்கரவாகனம் எலம் எடுத்தவர்கள் ஏலத்தொகையையும், ஏலத்தொகையுடன் 18% (GST) சரக்கு மற்றும் சேவை வரியும், சேர்த்து உடனே பணம் செலுத்த வேண்டும். ஏலம் எடுத்த வாகனத்திற்கு உண்டான இரசீதே அவ்வாகனத்தின் உரிமை ஆவணமாகும்.

மேலும், எல ரசீது எந்த பெயரில் பெறப்படுகிறதோ அவரே ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும் மற்றும் அவர் பெயரிலேயே வாகனத்திற்கு உண்டான உரிமை இரசீது வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு துணை காவல் கண்காணிப்பாளர், ஆயுதப்படை திருப்பத்தூர் மாவட்டம் அவர்களது அலுவலகத்தில் நேரடியாகவோ, தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம் அலுவலக தொலைபேசி எண்: 9498186375.

- S. **மோகன்**

## போலீஸ் உயர் அதிகாரிகளுடன் தமிழக சட்டம் ஒழுங்கு குறித்து டிஜிபி சங்கர் ஜிவால் ஆலோசனை



தமிழகத்தில் கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு, பாலியல், போதைப் பொருள் உட்பட பல்வேறு வகையான குற்றச்செயல்களை முற்றிலும் தடுக்க டிஜிபி சங்கர் ஜிவால் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதன் ஒருபகுதியாக மண்டல ஐஜிக்கள், மாநகர் - பெருநகர் காவல் ஆணையர்கள், மாவட்ட எஸ்பிக்களுக்கு அவ்வப்போது தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறார். அவர்களின் செயல்பாடுகளை நேரடியாகவும், உளவுத்துறை மூலமும் கண்காணித்து தேவையான உத்தரவுகளை பிறப்பிக்கிறார்.

உத்தரவுகள் அனைத்தும் ஒரே மாதிரியாக இல்லாமல் சூழ்நிலைக்கு தகுந்தவாறு சட்டத்துக்கு உட்பட்டு பிறப்பிக்கப்பட்டு வருகிறது.

அண்மைக் காலமாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும், போதைப் பொருட்களின் நடமாட்டம் அதிகளவில் இருப்பதாகவும் அதிகளவில் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த விவகாரத்தில் அனைத்து மாவட்ட போலீஸாரும் அதிக கவனம் செலுத்தி குற்றம் இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும் என டிஜிபி சங்கர் ஜிவால் அறிவுறுத்தியுள்ளார்.

- P. **ஸ்டாலின்**

# நீட் ரகசியத்தை உடனடியாக சொல்ல வேண்டும்... இபிஎஸ் ஆவேசம்






நீட் ரகசியத்தை சொல்ல வேண்டும்“நீட் ரகசியத்தை மு.க.ஸ்டாலினும் உதயநிதியும் உடனடியாக சொல்ல வேண்டும், அப்படி இல்லை என்றால் திமுக பொய்தான் சொன்னது என்ற உண்மையை ஒப்புகொண்டு இனியாவது எந்த நீட் மரணமும் நிகழாவண்ணம் தடுக்க வேண்டும்.” என எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நீட் தேர்வு குறித்த அச்சம் காரணமாக மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன். அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூட திமுகவின் நீட் ரகசிய அரசியல் நாடகம் குறித்து நான் பேசிய நிலையில், நாமும் மருத்துவர் ஆகிவிடலாம் என்கிற உயரிய லட்சியத்தோடு அல்லும் பகலும் படித்து வரும் மாணவர்கள் மத்தியில், ஆட்சிப்பொறுப்பேற்று 4 ஆண்டுகள் ஆகியும் இன்று வரை அவர்களுக்கு திமுக,



அந்த நீட் ரகசியத்தை சொல்லாமல், ரகசியம் இருப்பதாக பொய்யான நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை குழப்பத்திலேயே வைத்திருக்கும் இந்த ஸ்டாலின் மாடல் அரசுதான் மாணவியின் மரணத்திற்கு முழுப்பொறுப்பேற்க வேண்டும்.

அந்த நீட் ரகசியத்தை தந்தையும் மகனும் உடனடியாக சொல்ல வேண்டும். அப்படி இல்லை என்றால், திமுக பொய்தான் சொன்னது என்ற உண்மையை ஒப்புகொண்டு, இனியாவது எந்த நீட் மரணமும் நிகழாவண்ணம் தடுக்க வேண்டும்.” என தெரிவித்துள்ளார்.

- V. **சந்தோஷ்குமார்**



திருப்பூர் மாவட்டம், முத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் கட்டும் பணியினை துவக்கி வைத்தார் அமைச்சர் மு.பெ.சாமிநாதன். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா மற்றும் உதவி பொறியாளர் நிர்மலா.

- D. ராஜேஷ்

# வனவிலங்குகளுக்கு உதவும் வனத்துறை!

முதுமலை, மசினகுடியில் தொடரும் வறட்சியால், வன விலங்குகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, வனத்துறையினர் வாகனங்களில் தண்ணீர் எடுத்து சென்று தொட்டிகளில் ஊற்றி வருகின்றனர்.

முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் முதுமலை மசினகுடி கோட்டம் வன உயிரினங்களின் முக்கிய வாழ்விடமாக உள்ளது. இங்கு வறட்சியின் தாக்கமும் அதிகரித்துள்ளது. தாவரங்கள் கருகி வருவதுடன், மரங்களில் இலைகள் காய்ந்து உதிர துவங்கியுள்ளன. வனவிலங்குகளுக்கு உணவு, குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், வனத்துறையினர் வாகனங்களில் தண்ணீர் எடுத்து சென்று, வறட்சியான பகுதிகளில் உள்ள குடிநீர் தொட்டிகளில் ஊற்றி, விலங்குகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகின்றனர்.

வனத்துறையினர் கூறுகையில், ‘வனப்பகுதியில் வறட்சியின் தாக்கம் அதிகரித்து வன விலங்குகளுக்கு உணவு, குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு இடம்பெயர



துவங்கி உள்ளன. இதனை தவிர்க்க, வாகனங்களில் தண்ணீர் எடுத்து சென்று வறட்சியான பகுதிகளில் உள்ள தொட்டிகளில் சுழற்சி முறையில் குடிநீர் ஊற்றி வருகிறோம். கோடை மழை பெய்தால் மட்டுமே இந்த பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்,’ என்றனர்.

- ஜெபசீலன்




# இன்றைய சினிமாவின் போக்கு...

சினிமாத் துறையில் சிலரது சமூக சிந்தனை அற்ற, பொறுப்பு அற்ற எதேச்சதிகார போக்கால், சமீப காலமாக சமூகம் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகிறது என்பது எவரும் மறுக்கவியலாத உண்மை. அதற்கு எடுத்துக்காட்டாக இருப்பது, கெட்ட பெண் (BAD GIRL) எனும் திரைப்படம்.

காதல் இப்படித்தான் இருக்க வேண்டும், கல்யாணம் இப்படித்தான் இருக்கவேண்டும், ஆண் பெண் உறவு முறை இப்படித்தான் இருக்கவேண்டும், காமத்தை யாரிடம் காட்ட வேண்டும், ஒழுக்கம் இதுதான், வீரம் இதுதான், என்று பொது வெளியில் காலங்காலமாக கடைபிடிக்கப் பட்டிருக்கும் கற்பிதங்கள், ஓரிரு ஆண்டுகளில் உருவானவை அல்ல. நம் முன்னவர்கள் யுகம் யுகமாக வாழ்ந்த வாழ்க்கை அனுபவத்தை, சாத்திரங்கககளாக வடித்து வைத்து உள்ளனர். மனிதன் மிருகத்திலிருந்து மாறுபட்டவன். அவன் இப்படிதான் வாழ வேண்டும் என்று வகுத்து வைத்து உள்ள நியதிதான் சமூக கட்டுப்பாடு.

பண்டை காலத்தில் சமூக கட்டுப்பாடு மீறிய செயலுக்கு தண்டனை, ஊரை விட்டு ஒதுக்கி வைத்தல். சமீப காலம் வரை, நாட்டாமை மூலம் இது நடைமுறையில் இருந்துள்ளது. இன்றைக்கு ஊர் கூட்டம் கூட்டி ஒதுக்கி வைத்தால், அது சட்டத்துக்கு புறம்பான செயலாக சட்டத்தால் கருதப்படுகிறது.

கடவுள் மறுப்பு கூறவும், இந்து துவேசம் செய்யவும் ஒரு கூட்டம் இன்று மட்டும் அல்ல, புராண காலத்திலும் வாழ்த்து வந்தனர். இவர்களை வலிகர்கள் என்று கூறினார்கள். புராண காலத்தில் தேவர்களை விமர்சித்தவர், பிதுர், வேத மந்திரங்கள், யாகங்கள் முதலியவற்றை விமர்சிப்பவர்கள் மற்றும் அவற்றை சீர் குலைத்தவர்கள் தீண்டத்தகாத பாவிகள் என்று ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கப்பட்டனர் என்று மார்கண்டேய புராணம் தெரிவிக்கிறது.

புராண காலத்தில் நாடாக காதல் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்டு இருக்கவில்லை. அது சமூக கட்டுப்பாடு மீறிய செயலாகவே பார்க்கப்பட்டது.

கெட்டதை பார்க்காதே, கெட்டதை கேட்காதே, கெட்டதை பேசாதே என்றார் காந்தி மகான். சினிமா என்பது சமூகத்தில், குறிப்பாக இளம் தலைமுறை-யினர் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு மீடியா. எங்கோ நம் கண்ணுக்குத் தெரியாமல் சமூக கட்டுப்பாடு மீறி நடந்துகொண்டிருக்கும் சமுதாயச் சீர்கேடு ஒன்றைக் காட்டுகிறேன் என்று துவங்கி, இறுதியில் ஒட்டுமொத்த சமுதாயமும் சீர்கெட்டது என்ற தீர்ப்பை நசுக்கப் பட்ட, பிதுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதி என்று தங்களை கூறிக் கொள்பவர்கள் சமூகத்துக்கு திரைப்படம் என்ற பெயரில் வழங்குதல் நியாயமன்று.

'பேட் கேர்ள்' (Bad Girl) எனும் படத்தின் தயாரிப்பாளர்கள் வெற்றிமாறன், அனுராக் காஷ்யப் மற்றும் இயக்குநர் வர்ஷா பரத் சமூகத்துக்கு நல்லது செய்யவில்லை. நல்லவற்றை மக்கள் மனங்களில் நிலை நிறுத்த, அணை கட்டுவது போல் நீண்ட நாள் முயற்சி தேவை. அதை உடைத்து ஏறிய சிறு முயற்சி போதும். வெள்ளம் தடுத்தல் அரிது. தடுத்த வெள்ளத்தின் தடங்கரை உடைத்து விடுதல் எளிது. சமூக கட்டுப்பாடு மீறிய செயல்தான் வாழ்க்கை முறை என்பதாக சற்று மசால் சேர்த்து இளம் தலைமுறைக்கு ஊட்டினால், ஒப்பற்ற இந்திய கலாச்சாரத்துக்கு செய்யும் துரோகம் அது.

சட்டை மாற்றுவது போல் better choice தேடி, புருஷனை மாற்றும் கலாச்சாரம் உள்ள நாடுகள் மத்தியில், புல் ஆனாலும் புருஷன் என்று ஒருவனுடன் கடைசி வரை வாழும் கலாச்சாரம் கொண்டது இந்த நாட்டு கலாச்சாரம். Bird girl சர்வதேச திரைப்பட விழாவுக்காக எடுக்கப்பட்ட படமாக இருந்தால்கூட, அது இந்திய சமூகம் குறித்து மேலை நாட்டவர் கொண்டிருக்கும் நல்லபிப்பிராயத்தை அகஸ்மாத்தாக அசிங்கப்படுத்திவிட்டுச் செல்லும் என்று ஏன் இவர்களுக்கு தெரியவில்லை?




Bad girl டீசரில் நாயகி எடுத்த எடுப்பில், “என் நினைவுக்கு எட்டிய காலத்தில் இருந்தே நான் எனக்கொரு ஆண் நண்பர் வேண்டுமென்று விரும்பி-யிருக்கிறேன்” எனக் கூறுகிறார். பள்ளி பருவத்தில் boyfriend வைத்துக் கொள்வது, அவனுடன் பால் உறவு கொள்வது, குழந்தை பெற்றுக் கொள்வது, அதன் பின் பிடித்து இருந்தால் திருமணம் என்பது எல்லாம் மேலை நாட்டு கலாச்சாரமாக இருக்கலாம்.

பள்ளிப் பருவத்தில் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். படிப்பு முடிந்தவுடன், நற்குறி உள்ள ஒரு தொழில் செய்து தன் வாழ்வு ஆதாரத்தை தேட வேண்டும். அதற்குப்பின் தனக்கு ஏற்ற ஒரு பெண் துணையை பெற்றவர்கள் உதவியுடன் தேர்ந்து எடுத்து மண வாழ்க்கையில் புத்திரர்களை பெற்று எடுத்து பிரஜாபதிகளை மகிழ்விக்க வேண்டும். கிரஹஸ்த நிலையில் கடமைகள் முடிந்த பின் சந்நியாசம் மேற்கொள்ள வேண்டும். அதுவே பிறப்பு அற்ற பெரு வாழ்வு அடையும் வழி என்று கூறுகிறது இந்து மதம்.

சினிமாவின் வீச்சு பெரியது என்பதால் சினிமா மூலம் ஒரு கருத்தைப் பகிரும் போது எச்சரிக்கை அவசியமாகிறது. பட புரோமோஷன் விழாவில் இயக்குநர் பேசும்போது, இந்தப் படத்தின் மூலம் பெண்கள் குடிக்க வேண்டும், தம் அடிக்க வேண்டும் என்பதை நான் ஊக்குவிக்கவில்லை. அதேவேளையில் பெண் என்றால் புனிதர் என்றும், பெண் என்றால் தியாகத்தின் உருவகம் என்றும், பெண் என்றால் தாய்மைக்கானவள் என்றும் அடுக்கடுக்கான பொறுப்புகளை சுமத்தாதீர்கள். பெண்கள் புனிதர்களாக இருக்க வேண்டுமென்பது இல்லை அவர்கள் மனிதர்களாக இருந்தால் போதும் என்பதையே வலியுறுத்து விழைவதாகக் கூறினார்.

“தற்காத்து தற்கொண்டார்பேணி தகைசார்ந்த சொற்காத்து சோர்விலாள் பெண்” என்றார் திருவள்ளுவர். அதாவது தன்னுடைய கற்பை காத்து, தன்னுடைய கணவனுக்கு, பெற்ற பிள்ளைகளுக்கு செய்யவேண்டிய பணிவிடைகளை குறைவற செய்து, எல்லோரும் மதிக்கத் தக்க வகையில் சொல் ஆட்சி மூலம் அனைவரின் அன்புக்கு உரியவராக, பின் தூங்கி முன் எழும் சோர்வு அற்றவளாக பெண் இருப்பாளாயின் அந்த குடும்பத்தில் அன்பும், பாசப் பிணைப்பும், செல்வமும் தழைக்கும். அதை விட்டுவிட்டு, என் உடம்பு என் உரிமை, என்று ஊர் சுற்றியாக காமம் கொண்டு அலைபவளாக பெண் இருப்பாளே ஆயின், அந்த குடும்பத்தில் நிம்மதி கேடு தவிர எதுவும் இருக்காது.

மானிடன் ஆடு, மாடு போல் கண்ட இடத்தில் பால் உணர்வு கொள்வது கூடாது என்பது இந்தியாவின் ஒப்பற்ற கலாச்சாரம். உணர்வுகளை கட்டுப்படுத்த தெரிந்தவன் மனிதன். அதை கட்டுப்படுத்த தெரியாதவனுக்கு, அண்ணா பல்கலை மாணவி கற்பழிப்பு நாயகன், இரண்டு பொண்டாட்டி இருந்தும் காமத்தை கட்டுப் படுத்த முடியாமல் சீரழித்து போவது போன்ற நிலைதான் உருவாகும். காமத்தை கட்டுப் படுத்த முடியவில்லை என்றால் யாருடன் வேண்டுமானாலும் காட்டலாம், அவர்களும் பெண் தானே என்று காட்டினால் மனிதனுக்கும் மிருகத்துக்கும் என்ன வேற்றுமை?

‘பேட்-கேர்ள்’ படத்தில் அந்த நாயகி பிராமண சமூகப் பின்னணியில் இருப்பதை டீசர் வெளிப்படையாகவே புலப்படுத்துகிறது. இங்கே ஒரு பெண் பிள்ளையின் உணர்வுகளை, எதிர்பார்ப்புகளை, ஏக்கங்களை, தேடல்களைப் பற்றிப் பேசும்போது ஏற்கெனவே சமூகத்தில் பெரும் பேசு பொருளாக இருக்கும் சாதிய, மத அடையாளங்களை தூக்கி நிறுத்தி ஈவேரா வின் பிராமண துவேச பேச்சுக்கு உயிர் ஓட்டம் கொடுக்க நினைக்கிறார்களா?

சமூகத்தைப் பிரதிபலிக்கும் எத்தனையோ நல்ல சிறப்பான அம்சங்கள் இருக்க, சமூகத்தைப் பாதிக்கும் அம்சங்கள் மட்டுமே பிரதானப்படுத்தி சினிமா படம் எடுப்பது வருத்தத்துக்குரிய விஷயம்.

கலியின் தாக்கத்தால் ஏற்பட்டு உள்ள சமூக சீரழிவுக்கு காரணமாக அமையக் கூடிய இது போன்ற படங்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும். அதுவே அவர்கள் புராண காலத்தில் இது போன்ற செயலுக்கு ஒதுக்கி வைக்கப் பட்டது போன்ற ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வல்லது.

நீ எதை நினைக்கிறாயோ, எதை பார்கிறாயோ அதுவாகவே மாறி விடுகிறாய். கெட்டதை பார்க்காதே, கெட்டதை கேட்காதே, கெட்டதை பேசாதே என்ற காந்தி மகானின் அறிவுரைப்படி சமூகத்துக்கு கேடு விளைவிக்கும் சினிமா படங்களை பார்க்காமல் புறக்கணிப்பது எதிர்காலத்துக்கும், சந்ததிகள் வாழ்வுக்கும் நல்லது.

source: https://www.facebook.com/groups/510958861000097/posts/970013175094661/?_rdr

- P. கார்த்திகேயன்

# ஐரோப்பிய ஆணையத்தின் தலைவருடனான அமர்வில் பிரதமர் திரு நரேந்திர மோடி உரை ஆற்றினார்




மதிப்பிற்குரியவர்களே,

உங்கள் அனைவரையும் இந்தியாவுக்கு அன்புடன் வரவேற்கிறேன். ஐரோப்பிய யூனியன் ஆணையர்கள் ஒரு நாட்டுடன் இவ்வளவு பரந்த அளவில் ஈடுபாடு கொண்டிருப்பது முன் எப்போதும் இல்லாதது.

எனது அமைச்சர்கள் பலர் இந்த எண்ணிக்கையில் இருதரப்பு பேச்சு வார்த்தைகளுக்காக ஒன்று கூடுவது இதுவே முதல் முறை. 2022-ம் ஆண்டில் ரைசினா உரையாடலில் இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் இயற்கையான கூட்டாளிகள் என்று நீங்கள் கூறியது எனக்கு நினைவிருக்கிறது. இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்துவதும், உற்சாகப்படுத்துவதும் வரும் பத்தாண்டுகளில் ஐரோப்பிய யூனியனின் முன்னுரிமையாக இருக்கும்.

இப்போது, உங்கள் புதிய பதவிக்காலத்தின் தொடக்கத்தில் நீங்கள் இந்தியாவுக்கு வருகை புரிந்துள்ளீர்கள். இது இந்தியாவுக்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் ஒரு மைல்கல் தருணம் ஆகும்.

மதிப்பிற்குரியவர்களே,

உலகம் தற்போது முன்னெப்போதும் இல்லாத மாற்றத்தைச் சந்தித்து வருகிறது. செயற்கை நுண்ணறிவு, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் ஆகியவை சமூக-பொருளாதார மாற்றங்களுக்கு வழிவகுக்கின்றன.

புவிசார் பொருளாதார - அரசியல் சூழ்நிலைகள் வேகமாக மாறி வருகின்றன. பழைய சமன்பாடுகள் உடைந்து கொண்டிருக்கின்றன. இதுபோன்ற நேரங்களில், இந்தியாவுக்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான ஒத்துழைப்பு முக்கியமானதாகிறது.

ஜனநாயக மாண்புகள், சுயாட்சி, விதிகள் ஆகியவற்றின் அடிப்படையிலான உலக ஒழுங்கில் பகிரப்பட்ட நம்பிக்கை இந்தியாவையும் ஐரோப்பிய யூனியனையும் ஒன்றிணைக்கிறது. இருதரப்பும், பன்முகத்தன்மை கொண்ட சந்தைப் பொருளாதாரங்களாகும். ஒரு வகையில் நாங்கள் இயற்கையான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கூட்டாளிகள்.

மதிப்பிற்குரியவர்களே,

இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் உத்திசார் ஒத்துழைப்பின் இருபது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளன. உங்களது வருகையின் மூலம், அடுத்த பத்தாண்டுகளுக்கான அடித்தளத்தை நாங்கள் அமைக்கிறோம்.

இந்தச் சூழலில், இரு தரப்பினரும் காட்டிய குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது. கடந்த இரண்டு நாட்களில் சுமார் இருபது அமைச்சர்கள் நிலையிலான கூட்டங்கள் நடந்துள்ளன.

வர்த்தக – தொழில்நுட்ப கவுன்சில் கூட்டமும் இன்று காலை வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இருதரப்புக் குழுவினரும் கூறிய யோசனைகள் மதிப்புமிக்கவை.

மதிப்பிற்குரியவர்களே,

ஒத்துழைப்புக்கான சில முன்னுரிமைத் துறைகளை அடையாளம் காண விரும்புகிறேன்.

முதலாவது வர்த்தகம் – முதலீடு. பரஸ்பர நன்மை பயக்கும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தையும், முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் விரைவில் முடித்து வைக்க வேண்டியது அவசியம்.

இரண்டாவது, விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவது. மின்னணுவியல், செமிகண்டக்டர்கள், தொலைத்தொடர்பு, பொறியியல், பாதுகாப்பு, மருந்து போன்ற துறைகளில் நமது திறன்கள் ஒன்றையொன்று நிறைவு செய்யும். பாதுகாப்பான, நம்பகமான மதிப்புச் சங்கிலியை உருவாக்க இத்துறைகள் உதவும்.

மூன்றாவது போக்குவரத்து இணைப்பு. ஜி20 உச்சி மாநாட்டின் போது தொடங்கப்பட்ட ஐஎம்இசி வழித்தடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியாகும். இதில் இருதரப்பும் வலுவான அர்ப்பணிப்புடன் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்.

நான்காவது தொழில்நுட்பம், புத்தாக்க கண்டுபிடிப்பு. தொழில்நுட்ப இறையாண்மை குறித்த நமது பகிரப்பட்ட பார்வையை உணர, நாம் தொடர்ந்து விரைவான முன்னேற்றத்தை அடைய வேண்டும். டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு குவாண்டம் கம்ப்யூட்டிங், விண்வெளி, 6-ஜி போன்ற துறைகளில், இளம் திறமையாளர்களை ஊக்குவிக்க இரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

ஐந்தாவது காலநிலை நடவடிக்கை, பசுமை ஆற்றல் புத்தாக்க கண்டுபிடிப்புகள். இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் பசுமை மாற்றத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளன. நீடித்த நகரமயமாக்கல், குடிநீர், தூய்மையான எரிசக்தி ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம், உலகளாவிய பசுமை வளர்ச்சியின் முன்னோடிகளாக நாம் மாற முடியும்.

ஆறாவது பாதுகாப்பு. இணைந்த வளர்ச்சி, கூட்டு உற்பத்தி ஆகியவை மூலம் நாம் ஒருவருக்கொருவர் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டங்களில் ஒருவருக்கொருவர் முன்னுரிமை அளிக்க நாம் பணியாற்ற வேண்டும்.

ஏழாவது பாதுகாவல். பயங்கரவாதம், தீவிரவாதம், கடல்சார் பாதுகாப்பு, இணையதளப் பாதுகாப்பு, விண்வெளிப் பாதுகாப்பு ஆகியவற்றால் எழும் சவால்களை எதிர்கொள்ள அதிக ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

எட்டாவது மக்களுக்கிடையேயான உறவு. இடப்பெயர்வு, போக்குவரத்து , ஷெஞ்சன் விசா மற்றும் ஐரோப்பிய யூனியனின் புளூ கார்டு ஆகியவற்றை எளிமையாகவும் சிரமம் இல்லாததாகவும் மாற்றுவது இரு தரப்பினருக்கும் முன்னுரிமையாக இருக்க வேண்டும். இது ஐரோப்பிய யூனியனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக உள்ளது. ஐரோப்பாவின் வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் இந்தியாவின் இளம் தொழிலாளர்கள் பெரிய பங்களிப்பை வழங்க முடியும்.

மதிப்பிற்குரியவர்களே,

அடுத்த இந்திய-ஐரோப்பிய யூனியன் உச்சிமாநாட்டில், நாம் லட்சியம், செயல்திறன் அர்ப்பணிப்புடன் முன்னேறிச் செல்ல வேண்டும்.

இன்றைய செயற்கை நுண்ணறிவு சகாப்தமானது எதிர்காலப் பார்வையை வெளிப்படுத்துபவர்களுக்குச் சொந்தமானது.

மதிப்பிற்குரிய ஐரோப்பிய யூனியன் தலைவர் அவர்களே, உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள உங்களை அழைக்கிறேன்.

- N V **சிவசங்கர்**

# திருப்பத்தூர் மாவட்ட காவல் துறை சார்பில் விழிப்புணர்வு வாக்கத்தான் போட்டி!







உலக மகளிர் தினம் மற்றும் பெண்கள் பாதுகாப்பு காவல் உதவி செயலி 181 விழிப்புணர்வு வாக்கத்தான் போட்டி 08.03.2025 உலக மகளிர் தினத்தை முன்னிட்டும், பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் காவல் உதவி செயலி 181 குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு காவல்துறை சார்பாக திருப்பத்தூர் மாவட்டத்தில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு கோவிந்தராசு அவர்கள் தலைமையில் பெண்களுக்கான வாக்கத்தான் விழிப்புணர்வு போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியில் பெண் காவல்துறை அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் பங்கு பெற்றனர். வாக்கத்தான் விழிப்புணர்வு போட்டி வாணியம்பாடி பேருந்து நிலையத்தில் துவங்கி





இஸ்லாமியா மகளிர் கல்லூரி மைதானத்தில் முடிவடைந்தது.

மேலும் நிகழ்ச்சியில் காவல் உதவி செயலி 181 குறித்தும், அதனை பயன்படுத்தும் முறைகள் குறித்தும் எடுத்துக் கூறி வாக்கத்தான் போட்டியில் வெற்றி பெற்ற மகளிர்களுக்கு மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பரிசுகள் வழங்கி மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.

- S. **மோகன்**

# தொல்லை கொடுக்கும் ஸ்பேம் கால்கள்!




இன்றைய டிஜிட்டல் காலகட்டத்தில், சாமானியர்களுக்கு சந்திக்கும் பிரச்சனைகளில் ஒன்று ஆன்லைன் மோசடி. மின்சார கட்டணம் செலுத்துவது முதல் ரயில் டிக்கெட் முன்பதிவு வரை அனைத்தும் ஆன்லைனில் செய்வது எளிதாக இருந்தாலும், டிஜிட்டல் குற்றங்கள், ஆன்லைன் மோசடி சம்பவங்கள் அதிகரித்து விட்டன. இதில், டெலிமார்க்கெட் நிறுவனங்கள் என்ற போர்வையில் பல மோசடிகள் நடந்தன, இன்றும் மோசடி செய்பவர்கள் இந்த முறையை அதிகம் விரும்புகிறார்கள்.

**டெலி மார்க்கெட்டிங் நிறுவனங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை**

ஆனால், இப்போது ஆன்லைன் மோசடி சம்பவங்களினால் பாதிப்படும் சாமானியர்களை காப்பாற்ற, ஸ்பேம் அழைப்புகள் மற்றும் செய்திகளை கட்டுப்படுத்த TRAI ஒரு புதிய திட்டத்தை தயாரித்துள்ளது.தொலைத்தொடர்புத் துறையை ஒழுங்குபடுத்தும் TRAI, இப்போது மோசடி சம்பவங்களைத் தடுக்க ஸ்பேம் அழைப்புகள் மற்றும் செய்திகளைக் கட்டுப்படுத்தத் தயாராக உள்ளது. இனி டெலி மார்க்கெட்டிங் நிறுவனங்களும் இதன் வரம்புக்குள் வரலாம்.

**TRAI கொண்டுவந்துள்ள திட்டம் என்ன?**

இந்தியாவில் ஸ்பேம் அழைப்புகள் மற்றும் மோசடி நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளை தொலைத்தொடர்புத் துறை தீவிரப்படுத்தியுள்ளது.

போலி அழைப்புகள் மூலம் ஏமாற்றுவதைத் தடுக்கும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, நுகர்வோரைப் பாதுகாக்க மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மத்திய அரசு புதிய கொள்கைகளை செயல்படுத்தியுள்ளது.

பார்சிலோனாவில் நடந்த மொபைல் வேர்ல்ட் காங்கிரஸில் பேசிய மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, இந்தியா தினமும் 13 மில்லியன் மோசடி அழைப்புகளைத் தடுப்பதாகத் தெரிவித்தார். இந்த முயற்சியில் ஒரு முக்கிய முயற்சியாக சஞ்சார் சாதி போர்டல் உள்ளது. இது சைபர் மோசடியுடன் தொடர்புடைய 26 மில்லியன் மொபைல் சாதனங்களை வெற்றிகரமாகத் தடுத்து, 16 மில்லியன் திருடப்பட்ட சாதனங்களைக் கண்டுபிடிக்க உதவியது.

**எதிர்ப்பு தெரிவிக்கும் டெலிகாம் நிறுவனங்கள்**

டிராயின் இந்த திட்டத்தை தொலைத்தொடர்பு நிறுவனங்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. ரிலையன்ஸ் ஜியோ, பார்தி ஏர்டெல் மற்றும் வோடபோன் ஐடியா போன்ற நிறுவனங்கள் ஸ்பேமைக் கட்டுப்படுத்த இப்போது உருவாக்கப்பட்ட விதிகளில், OTT பிளேயர்கள் மற்றும் டெலி மார்க்கெட்டர்கள் போன்ற முக்கிய நிறுவனங்கள் ஏன் சேர்க்கப்படவில்லை என கேள்வி எழுப்புகின்றன. TRAI இந்த பிரச்சினையில் ஒரு ஆலோசனை அறிக்கையை கொண்டு வரும்போது, அது அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் கருத்தில் கொண்டு அவர்களின் பிரச்சனையைத் தீர்க்கும் என்று கூறுகிறது.

**கூடுதல் செலவுகளின் சுமை**

தொலைத்தொடர்பு நிறுவனங்களின் மிகப்பெரிய பிரச்சனை என்னவென்றால், அவை வெறும் டெலி-மார்கெட்டிங் மற்றும் OTT இயங்குதளங்களுக்கான உள்கட்டமைப்பு வழங்குநராக மட்டுமே உள்ளன, ஆனால் ஸ்பேமைத் தடுக்க, கூடுதல் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் மற்றும் அவற்றைக் கையாள்வதற்கான செலவுகள் அவர்கள் மீது சுமத்தப்படுகின்றன.

**மாதம் தோறும் 55 பில்லியன் எஸ்எம்எஸ் அனுப்பப்படுகிறது**

இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 1.5 முதல் 1.7 பில்லியன் வணிகச் செய்திகள் அனுப்பப்படுகின்றன. இந்த வழியில், ஒவ்வொரு மாதமும் மொத்தம் 55 பில்லியன் வணிகச் செய்திகள் நாட்டின் அனைத்து டெலிகாம் பயனர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. அத்தகைய சூழ்நிலையில், இந்த ஸ்பேம்களைக் கண்டறிவது சிக்கலானதோடு, அதிக செலவு பிடித்த பணியாகும்.

- B. நவீன்குமார்




தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், உலக மகளிர் தினம் மார்ச் 8 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கமே ரத்த பேதம் இல்லை, பால் பேதம் இல்லை என்பதுதான். அதுவே முழுமையான சமூக நீதி. திராவிட இயக்கத்தை உருவாக்கிய பெரியார், வாழ்நாளெல்லாம் பெண் விடுதலைக்காக உழைத்தார். திராவிட இயக்க ஆட்சிக் காலங்களில் பெண்களுக்கு உரிமைகள் மீட்டுத் தரப்பட்டது.

திராவிட இயக்கத்துக்கு ஆதி விதையான நீதிக்கட்சி ஆட்சியில்தான் பெண்களுக்கு முதன்முதலாக வாக்குரிமை தரப்பட்டது. சுயமரியாதை திருமண சட்டம், சொத்துரிமை, காவல்துறையில் மகளிர், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிருக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று பல முற்போக்குத் திட்டங்களை கொண்டு வரப்பட்டது.

திராவிட மாடல் ஆட்சியில், புதுமைப் பெண், விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுவினரை பங்கு பெறச் செய்திருக்கிறோம். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் மற்றும் குழந்தை திருமணங்களை தடுத்து அவர்களை பாதுகாக்க ‘பாலின வள மையங்கள்’ உருவாக்கப்பட்டுள்ளது.உள்ளாட்சியில் பெண்களை அதிகாரம் மிக்கவர்களாக உயர்த்த, 50 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கீடு வழங்கினோம். அதில் வெற்றி பெற்றதில் 70 விழுக்காட்டுக்கும் மேற்பட்டவர்கள் சுய உதவிக் குழு மகளிர்தான்.

வேலை செய்யும் பெண்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு நாம் தொடங்கிய தோழி விடுதிகளுக்கு பெரிய வரவேற்பு கிடைத்திருக்கிறது. இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் அறிவிக்க விரும்புவது, புதிதாக காஞ்சிபுரம், ஈரோடு, தருமபுரி, சிவகங்கை, தேனி, கடலூர், நாகை, ராணிப்பேட்டை, கரூர் ஆகிய ஊர்களில் 72 கோடி ரூபாயில், 700 படுக்கைகளுடன் புதிய தோழி விடுதிகள் அமையும். அதுவும், 24 மணிநேரமும் பாதுகாவலர், பயோமெட்ரிக் நுழைவு முறை, வைஃபை வசதி, R.O. முறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் என்று பல வசதிகளுடன் அதை அமைக்க இருக்கிறோம்.

சென்னை மாநகரத்தில், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்கின்ற விதமாகவும், பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற விதமாகவும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், தலா ஒரு லட்சம் ரூபாய் அரசு மானியத்துடன் 250 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பிங்க் நிற ஆட்டோக்களை வழங்கி இருக்கிறோம். இதில், காவல்துறை உதவி எண்களுடன் இணைக்கப்பட்ட GPS கருவியும் பொருத்தப்பட்டிருக்கிறது.

இந்த விழாவில், 1000 மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகளுக்கு நான் அடையாள அட்டைகளை

வழங்கி இருக்கிறேன். அதன் பயன்கள் என்ன தெரியுமா? கிராம மற்றும் நகரப் பேருந்துகளில், சுய உதவிக் குழுவினர் தாங்கள் தயாரிக்கின்ற பொருட்களை 25 கிலோ வரை கட்டணமின்றி எடுத்துச் செல்லலாம். முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தவர்கள் பயன்களைப் பெறலாம்.

கூட்டுறவு வங்கிகள் மூலமாக பெறப்படுகின்ற பல்வேறு கடன்கள் பெற முன்னுரிமை அளிக்கப்படும். கோ-ஆப் டெக்ஸ் பொருட்களுக்கு 5 விழுக்காடு கூடுதல் தள்ளுபடி வழங்கப்படும்.

குறைந்த விலை ஆவின் பொருட்களைப் பெறலாம். இ-சேவை மையங்களில், 10 விழுக்காடு சேவைக் கட்டணம் குறைக்கப்படும். இன்று தமிழகம் முழுவதும் 34 ஆயிரத்து 73 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 4 லட்சத்து 42 ஆயிரத்து 949 மகளிருக்கு 3 ஆயிரத்து 190 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கி இருக்கிறேன்.

தை தொடங்கி வைக்கின்ற விதமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்ற 3 ஆயிரத்து 584 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 592 மகளிருக்கு 366 கோடியே 26 லட்சம் ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை இந்த நிகழ்ச்சியில் வழங்கி இருக்கிறேன்.வங்கிக் கடன் இணைப்புகளைப் பெற்ற மகளிர் குழு சகோதரிகள், அந்தத் தொகையை நாங்கள் வழங்குகின்ற கடன் என்று நினைக்காமல், நம்முடைய அரசும், நானும் உங்கள் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் அடையாளமாக நீங்கள் நினைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசியலில், வேலை பார்க்கின்ற இடத்தில் என்று அனைத்து இடங்களிலும் உரிய மதிப்பும், மரியாதையும், பாதுகாப்பும் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். கேலி பேசுவதும், அவர்கள் வளர்ச்சியைக் கொச்சைப்படுத்துவதும் இருக்கவே கூடாது. அதுதான் உண்மையான சமுதாய சிந்தனை வளர்ச்சி. இதை எல்லோரும் கடைப்பிடிக்கவேண்டும். திராவிட மாடல் அரசில் பெண்களுக்கான திட்டங்களைப் பார்த்து பார்த்து இப்போது ஆண்களும் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். “என்னங்க எல்லா திட்டங்களும் பெண்களுக்குத் தானாஞ்எங்களையும் கொஞ்சம் கவனியுங்கள்” என்று ஆண்கள் கேட்கக்கூடிய அளவில் தான் இன்றைக்கு செயல்படுகிறோம். அது தொடரும், தொடரும்.

மகளிர் உரிமைத் தொகையால் பெண்கள் தங்களுடைய குடும்பத்தை பாதுகாக்கிறார்கள். அது ஆண்களையும் சேர்த்துதான் வளர்ச்சியடையச் செய்யும். என்னை தங்களுடைய குடும்பத்தில் ஒருவராக நினைத்து, பாசம் காட்டுகின்ற அத்தனை தாய்மார்கள், அவர்கள் குடும்பத்தின் ஆண்கள் என்று அனைத்துத் தரப்புக்குமான நல்லாட்சியாக, திராவிட மாடல் ஆட்சி எப்போதும் தொடரும்,” என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- S. **ராதிகா**

# “பெண்கள் பாதுகாப்பை மீட்டெடுப்போம்” என அஞ்சலை அம்மாள் சிலை முன்பாக

## தவெக தலைவர் விஜய் சபதம்!

நாட்டு விடுதலைக்காகவும், மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும் போராடிய விடுதலைப் போராளி, மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் அவர்களின் நினைவு தினத்தையொட்டி, பனையூரில் உள்ள தவெக தலைமை நிலையச் செயலகத்தில், அவரது திருவுருவச் சிலைக்கு தவெக தலைவர் விஜய் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் அவர்களின் நினைவு தினத்தில், பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் நலன் மற்றும்



உரிமைகளோடு, அவர்களின் பாதுகாப்பையும் மீட்டெடுக்க உறுதி ஏற்போம் என்று விஜய் கூறினார்.

- V. **கவியரசன்**

# புதிய கல்விக் கொள்கையை அரசியலாக்க வேண்டாம்! முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு

## மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கடிதம்!

புதிய கல்விக் கொள்கையை ஏற்க மறுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம் என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அவர் எழுதியுள்ள கடித்ததில் கூறியிருப்பதாவது:

"மாநில அரசுகள் கல்வி விவகாரத்தில் அரசியலை தவிர்த்து, கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, மாணவர்களின் அறிவு, திறன், மற்றும் எதிர்காலத்திற்கான வேலைவாய்ப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். புதிய கல்விக் கொள்கை 2020 சீர்திருத்தம் மட்டும் இல்லாமல் உலக அளவில் இந்திய கல்வி அமைப்பை மேம்படுத்தும் விதமாகவும், கலாச்சார பன்முகத்தன்மையை மேம்படுத்தும் விதமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி கடந்த 2022ஆம் ஆண்டு மே 26ஆம் தேதி சென்னை வந்த போது, தமிழ் மொழியின் உலக அளவில் சிறந்து விளங்குவது குறித்து பேசியுள்ளார். பிரதமர் மோடி வலியுறுத்தலின் பேரில் காசி தமிழ்ச் சங்கமம் மற்றும் சவுராஷ்டிரா தமிழ்ச் சங்கமம் மத்திய அரசால் நடத்தப்படுகிறது. கடந்த 2022இல் காசி தமிழ்ச் சங்கமத்தின் போது, பிரதமர் மோடி 13 மொழிகளில் திருக்குறளை வெளியிட்டார்.

அதே போல் திருக்குறள் நூல் 15 மொழிகளிலும், 46 இலக்கிய நூல் புத்தகங்கள் 118 பகுதியாகவும் பிரதமர் மோடியால் காசி தமிழ்ச் சங்கமத்தில் வெளியிடப்பட்டது. தற்போது நடைபெற்று வரும் காசி தமிழ்ச் சங்கமத்தில் 41



சிறந்த தமிழ் இலக்கியங்கள் மத்திய தமிழ் பல்கலைகழகம் மூலம் மொழிபெயர்க்கப்பட்டு, நானும், உத்தரப்பிரதேச முதல்வரும் வெளி-யிட்டோம்.

இந்த ஆண்டு காசி தமிழ் சங்கமத்தில் சித்தா மருத்துவம் மற்றும் தமிழ் இலக்கியத்தில் அகஸ்தியரின் பங்கு முக்கிய பகுதியாக முன்னிலைப்படுத்தப்படுகிறது. ஏஐ தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட அனுவதினி மற்றும் பாஷினி ஆகிய கருவிகள் தமிழ் உள்ளிட்ட பல மொழிகளுக்கு உடனடியாக மொழிபெயர்ப்பு செய்ய உருவாக்கப்பட்டுள்ளது. உயர் கல்வித்துறையில் முக்கிய போட்டித் தேர்வுகள் தமிழ் உள்ளிட்ட 13 மொழிகளில் நடத்தப்படுகிறது. மேலும் கடந்த 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், பிரதமர் மோடியின் சிங்கப்பூர் பயணத்தின் போது, இந்தியாவின் திருக்குறள் கலாச்சார மையத்தை நிறுவினார்.





FTS NO. 1543440

धर्मेन्द्र प्रधान
ଧର୍ମେନ୍ଦ୍ର ପ୍ରଧାନ
Dharmendra Pradhan

सत्यमेव जयते

आज़ादी का अमृत महोत्सव

शिक्षा मंत्री
भारत सरकार
Minister of Education
Government of India

Dated : 21.02.2025

Dear Sir,

I write to you with utmost respect and a deep sense of responsibility towards the future of our nation's education system. As leaders entrusted with shaping the destiny of our young minds, it is imperative that the state government rises above politics and prioritize policies that empower our students with knowledge, skills and opportunities for the future. The National Education Policy (NEP) 2020 is not just a reform—it is a transformative vision that seeks to elevate India's education system to global standards while preserving and strengthening our linguistic and cultural diversity.

2. The Hon'ble Prime Minister during his visit to Chennai on 26th May, 2022 had said "Tamil language is eternal and Tamil culture is global. The Government is fully committed to popularising Tamil language and culture". As you are aware, under the directions of the Hon'ble Prime Minister, Kashi Tamil Sangamam and Saurashtra Tamil Sangamam were organised by the Government of India to celebrate our shared diversity and cultural confluence between Tamil Nadu and other parts of India. During Kashi Tamil Sangamam held in 2022, Hon'ble Prime Minister released 'Thirukkural' translation in 13 Indian Languages by Central Institute of Classical Tamil (CICT). Subsequently 'Thirukkural' translation in 15 languages and Braille translation of 46 ancient literature books in 118 volumes were released by Hon'ble Prime Minister during Kashi Tamil Sangamam in 2023. During the ongoing Kashi Tamil Sangamam, 41 classical Tamil works of literature translated in Hindi language by CICT have been released by me along with Hon'ble Chief Minister of Uttar Pradesh.

3. The contributions of Sage Agastyar in the fields of Siddha medicine and Tamil literature and grammar have been kept as the main theme of Kashi Tamil Sangamam this year. AI based technological tools namely Anuvadini and Bhashini have been developed for instant translation of text in various languages including Tamil. Major competitive examinations under Ministry of Education for admissions to Higher educational institutions are conducted in 13 languages including Tamil. Hon'ble Prime Minister during his visit to Singapore in September, 2024 announced the setting up of India's first Thiruvalluvar Cultural

Page 1 of 3

सबको शिक्षा, अच्छी शिक्षा

MOE - Room No. 301, 'C' Wing, 3rd Floor, Shastri Bhavan, New Delhi-110 001, Phone : 91-11-23782387, Fax : 91-11-23382365
E-mail : minister.sm@gov.in



Continuation Sheet

Centre in Singapore, with an aim to promote the thoughts of the great Tamil saint across the world.

4. It is a matter of national pride that Tamil language is one of the oldest classical languages in the world and the oldest in India. To commemorate the birth anniversary of Shri Subramania Bharati, we have started celebrating Bharatiya Bhasha Utsav across all States and UTs and last year, the fortnight long celebrations witnessed participation by crores of students, teachers, academicians, public leaders and others. The Government of India has also actively worked to celebrate Tamil Nadu's unique literary and cultural legacy through the establishment of the Subramania Bharati Chair in renowned institutions. These initiatives are a testament to our commitment to fostering and promoting Tamil on a national and global scale. We treat all Indian languages included in the 8th schedule of the constitution as Bharatiya Bhasha and Tamil is accordingly bestowed the importance it deserves.

5. A central pillar of NEP 2020 is its deep and unwavering respect for India's rich linguistic heritage. The policy ensures that every student has access to quality education in their mother tongue, reinforcing the fact that Tamil is not just a regional identity but a national treasure.

6. Let me unequivocally state that there is no question of imposing any language on any state or community. NEP 2020 upholds the principle of linguistic freedom and ensures that students continue to learn in the language of their choice. In fact, one of the core objectives of the policy is to revive and strengthen the teaching of Indian languages, including Tamil, which have been gradually side-lined in formal education over the decades.

7. This brings me to a crucial point—the three-language policy, which has been the backbone of India's education framework since 1968. Unfortunately, despite being part of successive education policies, it was never implemented in letter and spirit, leading to a decline in the systematic teaching of Indian languages in schools. Over time, this has resulted in an over-reliance on foreign languages, limiting students' exposure to their linguistic roots. NEP 2020 seeks to correct this historical oversight by ensuring that every Indian language, including Tamil, receives its rightful place in education.

8. Tamil Nadu has always been a torchbearer of social and educational progress, pioneering some of the most transformative reforms in India. It has been at the forefront of movements that have shaped modern education, uplifted marginalized communities, and fostered an inclusive learning environment.

Page 2 of 3

MOE - Room No. 301, 'C' Wing, 3rd Floor, Shastri Bhavan, New Delhi-110 001, Phone : 91-11-23782387, Fax : 91-11-23382365
E-mail : minister.sm@gov.in



Continuation Sheet

9. However, the continued opposition to NEP 2020 for political reasons deprives students, teachers, and educational institutions in Tamil Nadu of the immense opportunities and resources that this policy offers. The policy is designed to be flexible, allowing states to customize its implementation to suit their unique educational needs. Moreover, centrally-supported programs such as Samagra Shiksha are aligned with NEP 2020. Also, PM SHRI schools have been conceptualised to be NEP exemplar schools.

10. Hence, It is inappropriate for the State to view NEP 2020 with a myopic vision and spin progressive educational reforms into threats to sustain their political narratives. The letter sent to the Hon'ble Prime Minister is a complete negation of the spirit of cooperative federalism, promoted by the Modi government. The policy does not advocate the imposition of any language. Many non-BJP states have implemented the progressive policies of NEP despite political differences. NEP 2020 aims to broaden the horizon, not narrow them.

I would, therefore, request you to rise above political differences and look into the matter holistically keeping in mind the interest of our young learners.

Yours Sincerely,

(Dharmendra Pradhan)

**Shri M. K. Stalin,**
Hon'ble Chief Minister of Tamilnadu,
Secretariat, Chennai – 600009
Tamilnadu.

Page 3 of 3

MOE - Room No. 301, 'C' Wing, 3rd Floor, Shastri Bhavan, New Delhi-110 001, Phone : 91-11-23782387, Fax : 91-11-23382365
E-mail : minister.sm@gov.in

உலகளவில் தமிழ் மொழி பழமையான மொழியாகும். சுப்ரமணி பாரதியாரின் பிறந்தநாளை கொண்டாடும் வகையில், இந்திய அளவில் பாரதிய பாஷா உத்சவ் கொண்டாடப்படுகிறது. மத்திய அரசு தமிழ் மொழியின் இலக்கியத்தை போற்றும் வகையில், பிரபல கல்வி நிறுவனங்களில் பாரதியாரின் பெயரில் இருக்கைகள் அமைத்துள்ளது. 8வது அட்டவணையில் தமிழின் முக்கியத்துவத்தை போற்றும் வகையில் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் வளமான கலாச்சாரத்திற்கு மரியாதை அளிக்கும் விதத்தில் புதிய கல்விக் கொள்கை 2020 முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. ஒவ்வொரு மாணவரும் தங்களது தாய்மொழியில் தரமான கல்வி பயில்வதை இந்த புதிய கல்வி கொள்கை உறுதி செய்கிறது.

புதிய கல்விக் கொள்கை அனைத்து மாநிலங்களிலும் கண்டிப்பாக அமல்படுத்தப்படும். புதிய கல்விக் கொள்கையின் சிறப்பம்சமாக இந்திய மொழிகளின் கற்றல் வலிமைப்படுத்தப்படும்.

இந்திய கல்வி வடிவமைப்பில் 1968 முதல் மும்மொழிக் கொள்கை முதுகெலும்பாக விளங்குகிறது. பள்ளியின் கல்வி அமைப்பில் வெளிநாட்டு மொழிகள் அதிகம் கற்பிக்கப்படும் நிலையில், மாணவர்களுக்கு தாய்மொழி கற்பித்தலுக்கான சூழ்நிலை குறைந்து வருகிறது. அந்த வகையில், புதிய கல்விக் கொள்கையில் தமிழ் உட்பட அனைத்து இந்திய மொழிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைக்கபட்டுள்ளது.

தமிழ்நாடு எப்போதும் கல்வியின் வளர்ச்சி மற்றும் சீர்திருத்தத்தில் வழிகாட்டியாக இருந்துள்ளது. அதே போல் நவீன கல்வியின் வளர்ச்சியின் வடிவமைப்பிற்கு முன்னோடியாகவும் விளங்குகிறது.

புதிய கல்விக் கொள்கைக்கு அரசியல் காரணங்களுக்காக வரும் எதிர்ப்புகளால் தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு கிடைக்கும் வாய்ப்புகள் பாதிக்கப்படுகிறது. ஓவ்வொரு மாநிலத்தின் கல்வித் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், இந்த கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் சமக்ரா சிக்ஷா திட்டம் புதிய கல்விக் கொள்கையோடு சேர்க்கப்பட்டுள்ளது.

புதிய கல்விக் கொள்கை தொலைநோக்கு பார்வையுடனும், கல்வியின் சீர்திருத்தம் கொண்டு வரும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய கல்விக் கொள்கையில் எந்த மொழியும் திணிக்கப்படாது. பாஜக ஆட்சி நடைபெறாத பல மாநிலங்களும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளன. அரசியல் வேறுபாடுகளுக்கு இடம் அளிக்காமல் மாணவர்களின் நலன் கருதி இந்த விவகாரத்தில் உரிய முடிவு எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த கடிதத்தில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் குறிபிப்பிட்டுள்ளார்.

**- தமிழ் வீரன்**

# ஆளி விதைகள்: நன்மைகள் - பக்கவிளைவுகள்!



தாவர உயிரினப் பிரிவில், ஆளி விதைகள், ஒமேகா- 3 கொழுப்பு அமிலங்களை வழங்கும் செறிவான ஆதாரங்களில் ஒன்று ஆகும். ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் என்பவை, உடலினால் தானே உற்பத்தி செய்து கொள்ளப்படாத, அத்தியாவசியமான கொழுப்பு அமிலங்களின் ஒரு தொகுப்பு ஆகும். எனவே, அவை ஒரு வெளி ஆதாரத்தில் இருந்து கண்டிப்பாக அடையப்பட வேண்டும்.ஆளி விதைகள், இந்த கொழுப்புக்களின் உணவு சார்ந்த ஆதாரமாக இருந்து, அதனால், உடலின் ஆரோக்கியமான செயல்பாட்டுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கிறது. ஆளி விதைகளில் காணப்படும் கொழுப்பு அமிலம், ஆல்ஃபா-லினோலெனிக் அமிலம் (ஏ.எல்.ஏ) மற்றும் லினோலெனிக் அமிலம் என அழைக்கப்படுகின்றது, இது, மீன்களில் காணப்படும் ஒமேகா 3யின், ஒரு தாவர வகை பதிப்பு போன்றதாக இருக்கிறது.

இந்தக் கொழுப்புகள், உடலில் வளர்சிதை மாற்றம் அடைந்து, இருதய இரத்தக் குழாய் (இதய) ஆரோக்கியத்தில் மிகவும் முக்கியமான ஒரு பங்கு வகிக்கிறது. அது மட்டும் அல்லாமல், ஆளி விதைகள், வைட்டமின் ஏ, சி, எஃப் மற்றும் இ, மற்றும் பொட்டாசியம், இரும்பு, மெக்னீஷியம் மற்றும் துத்தநாகம் போன்ற தாதுக்களையும் கூட, குறிப்பிடத்தக்க அளவு கொண்டிருக்கிறது. ஊட்டச்சத்து வல்லுநர்கள், இதற்கு “செயல்பாட்டு உணவு” என பொருத்தமாகப் பெயர் சூட்டியுள்ளனர்.

**ஆளி விதைகளின் ஆரோக்கிய நன்மைகள்**

ஆளி விதைகளை தொடர்ந்து எடுத்து கொள்வது, உங்கள் எடையை குறைக்க உதவ முடியும் எனக் கூறுகின்றது. ஆளி விதைகள் 35% உணவு சார்ந்த நார்ச்சத்தினைக் கொண்டிருக்கின்றன என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இந்த நார்ச்சத்தின் ஒரு பெரிய பகுதி, முதன்மையாக, உணவுக்கு ஒரு அதிக அளவை சேர்த்து உங்கள் குடல்களை நிரப்புகின்ற கரையாத நார்ச்சத்து ஆகும். இந்த உணவு உங்கள் குடல் வழியாக மெதுவாகப் பயணிக்கிறது, அதன் விளைவாக, நீண்ட நேரத்திற்கு வயிறு முழுமையாக நிரம்பியது போன்று நீங்கள் உணருகிறீர்கள். சிறந்த விஷயம் என்னவென்றால், உணவு உண்பதற்கு இடையேயான, இடைவெளியை அதிகரிக்கும் வேளையில், இது உங்களுடைய எந்த ஒரு ஊட்டச்சத்து தேவைகளையும் இழக்கச் செய்யாது. நீங்கள் எடையை இழக்க விரும்பினால், குறிப்பாக இது செயல்திறன் மிக்கது. அது மட்டும் அல்லாமல், உணவில் உள்ள ஒரு நல்ல அளவிலான நார்ச்சத்து, மலச்சிக்கல் எளிதாக்குவதில் உதவுகிறது. ஆனால், ஒரு ஆளி விதை மிகுந்த உணவுப் பழக்கத்தில், அந்த நார்ச்சத்து குடல்களில் அடைத்துக் கொள்வதைத் தவிர்க்க, அதிக அளவு தண்ணீர் அருந்துவது அவசியம் ஆகும். மேலும், ஆளி விதை பானங்கள் மற்றும் ஆளி விதை ரொட்டி ஆகியவற்றின் மேல் நடத்தப்பட்ட ஆய்வுகள், ஆளி விதைகளில் இருக்கும் நீரில் கரையக் கூடிய நார்ச்சத்து, இரத்தக் கொழுப்புகளைக் குறைக்கவும் கூட உதவிகரமாக இருப்பதாகத் தெரிவிக்கின்றன.

**எடைக் குறைப்பு மற்றும் மலச்சிக்கலுக்காக ஆளி விதைகள்**

**எடைக் குறைப்பை ஊக்குவிக்கின்றன:** ஆளி விதைகள், எடைக் குறைப்புக்கான ஒரு அருமையான பேரூட்ட சத்தான, நார்ச்சத்தினை செறிவாகக் கொண்டு இருக்கின்றன. அது உங்களை நீண்ட நேரத்திற்கு வயிறு நிரம்பியது போல் உணர வைக்கிறது மற்றும் அதிகப்படியாக உண்பதைக் குறைக்கிறது. கூடவே, நார்ச்சத்து, உடலில் இருந்து , உடன் பருமனுக்கு முக்கிய பங்களிப்பான, கொழுப்பை வெளியேற்றுவதை அதிகரிக்கிறது.

**மூளை முடக்குவாதத்தைத் தடுக்கின்றன:** ஆளி விதைகளில் தோன்றும் ஆலா, மூளையில் ரத்த சுழற்சியை மேம்படுத்த மற்றும் பாதிப்பிலிருந்து விடுபடுவதற்கான மூளையின் இயற்கையான திறனை அதிகரிப்பதாக கண்டறியப்பட்டு இருக்கிறது.

**திறன்மிக்க நீரிழிவு-எதிர்ப்பு சக்தி:** இந்தியாவில் செய்யப்பட்ட ஆய்வுகள், ஆளி விதைகளில் தோன்றும் ஒமேகா-3 கொழுப்புகள், ரத்தத்திலிருந்து சர்க்கரை உள்வாங்குதலை அதிகரிக்க உதவதாக

தெரிவிக்கின்றன. அதனால், ஆளி விதைகள், நீரிழவு உள்ளவர்களுக்கு ஒரு ஆரோக்கியமான உணவுத் தேர்வாக இருக்க முடியும்.

**இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன:** ஒமேகா 3 கொழுப்புகள், குறிப்பாக ஆலாவின் ஒரு நல்ல வழங்கு மூலமாக இருப்பதால், ஆளி விதைகள், உங்கள் இதயத்துக்கு ஆரோக்கியமான ஒரு உணவை உண்டாக்குகிறது. இது கொழுப்பு படிவுகள் உருவாகும் அபாயத்தைக் குறைப்பதாகக் கண்டறியப்பட்டு இருக்கிறது, அதனால், மாரடைப்பு மற்றும் பக்க வாதத்தைத் தடுக்கின்றது

**மாதவிடாய் நின்ற பெண்களுக்கான:** ஆராய்ச்சி ஆதாரங்கள், ஆளி விதைகள், சூடான நீர் வெளியேற்றம் மற்றும் ஹார்மோன் சமநிலை-யின்மை போன்ற மாதவிடாய் நின்ற பிறகான அறிகுறிகளுக்கான சிகிச்சையில் திறன்மிக்கதான, லிக்னினை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றன. ஆனால், இந்த நன்மையை உறுதி செய்ய மேலும் ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

**இளைமையான மற்றும் மலர்ச்சியான சருமத்தை அளிக்கின்றன:** ஆளி விதைகள், நீங்கள் எளிதில் பெறக்கூடிய சிறந்த சரும கவனிப்பு வினையாற்றிகளில் ஒன்று. அது வீக்கத்தை மற்றும் முகப்பருக்களை குறைப்பதோடு மட்டும் அல்லாமல், கூடவே அது உங்கள் சருமத்தை ஈரப்பதமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்து, அதனை இளமையாகவும் மற்றும் அதிக புத்துணர்ச்சியுடனும் வைக்கிறது.

**நீண்ட மற்றும் பளபளப்பான முடி:** ஆளி விதைகள் உங்கள் முடிக்கு பயன்படுத்தும் போது, உங்கள் முடி வேர்க்கால்களை புத்துணர்ச்சியூட்டுகிறது மற்றும் உங்கள் தலையின் மேற்பகுதிக்கு மிகவும் அவசியமான ஈரப்பதத்தை வழங்குகின்றன. இது உங்கள் முடியை வேகமாக வளர செய்கிற அதே வேளையில், இயற்கையான பளபளப்புடன் மின்னச் செய்கிறது.

**மணிக்கட்டு பாதை வலியை நீக்குகிறது:** மருத்துவமனை ஆய்வுகள், மணிக்கட்டு பாதை குறைபாட்டில், ஆளி விதை கூழ்மத்தின் ஆற்றலை நிரூபிக்கின்றன. அது, இந்தப் பிரச்சினையோடு இணைந்த வலி மற்றும் பிற அறிகுறிகளைக் குறைப்பதில் சக்தி வாய்ந்தது என கண்டறியப்பட்டு உள்ளது. இருந்தாலும், இந்த பிரச்சினைக்கு ஆளி விதை கூழ்மத்தை பயன்படுத்துவதற்கு முன்னர், ஒரு மருத்துவரிடம் சென்று ஆலோசிப்பது நல்லது.

மார்பக புற்றுநோய் அபாயத்தைக் குறைக்கின்றன: ஆளி விதைகள், மாதவிடாய் நின்ற பெண்களின் மார்பக-புற்றுநோய் அபாயத்தைக் குறைக்கப் பரிந்துரைக்கப்படுகிற, பைட்டோஸ்ட்ரோஜென்ஸ் (தாவர வகை ஈஸ்ட்ரோஜென்) உடைய, ஒரு இயற்கையான ஆதாரம் ஆகும்.

**ஆளி விதைகள் மார்பக புற்றுநோயின் அபாயத்தைக் குறைக்கின்றன**

சமீபத்திய ஆய்வுகள், ஆளி விதைகளில் காணப்படும் லிக்னன்கள் புற்றுநோய் எதிர்ப்பு சாத்தியமுள்ள பண்புகளை, குறிப்பாக மாதவிடாய் நின்ற பெண்களுக்கு,கொண்டிருப்பதாகக் கூறுகின்றன. இந்த லிக்னன்களின் செயல்பாடு, மார்பகப் புற்றுநோய் அபாயத்தைக் குறைப்பதாக நம்பப்படும், உடலில் உள்ள பெண்மை ஹார்மோன் "ஈஸ்ட்ரோஜென்" செயல்பாட்டை மிகவும் ஒத்ததாக இருக்கிறது. தொடர்ந்த ஆய்வுகளும், உடலில் உள்ள புற்றுநோய் செல்களின் அளவு மற்றும் எண்ணிக்கையைக் குறைப்பதோடு ஒமேகா 3 கொழுப்பு அமிலங்களை தொடர்புபடுத்துகின்றன. இந்த கொழுப்பு அமிலங்கள், புற்றுநோய் செல்களை ஒரு குறிப்பிட்ட, திட்டமிடப்பட்ட செல் இறப்புக்கு (செல்கள் தானே இறத்தல்) உட்பட செய்து, அதன் மூலம் புற்றுநோயின் தீவிரத்தைக் குறைக்கிறது என அவை தெரிவிக்கின்றன. இந்த நோயை எதிர்த்துப் போராடும், ஆளி விதைகளின் செயல்படும் முறை மற்றும் செயல்படும் திறனை உறுதி செய்ய, ஆய்வுகள் இன்னமும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**ஆளி விதைகளின் பக்க விளைவுகள்**

அளவுக்கு அதிகமாக ஆளி விதைகள் உட்கொள்வது, உங்கள் இரைப்பை பாதையை அடைத்துக் கொண்டு, மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப்போக்குக்கு காரணமாகி விடும். ஆளி விதைகளை எடுத்துக் கொள்ளும் போது, அதிக அளவு தண்ணீர் அருந்துங்கள், ஏனென்றால், அதிலிருக்கும் நார்ச்சத்து, குடல்களில் எளிதாகப் பயணிக்க, அதற்கு தண்ணீர் தேவைப்படுகிறது.

பச்சையான மற்றும் பழுக்காத ஆளி விதை உட்கொள்ளுவதற்கு பாதுகாப்பற்றது எனக் கருதப்படுகிறது. ஆளி விதைகளின் ஈஸ்ட்ரோஜென் போன்ற விளைவுகளின் காரணமாக, கர்ப்ப காலம் அல்லது பால் ஊட்டும் காலங்களில், அதனை எடுத்துக் கொள்வது, அறிவுறுத்த தக்கது அல்ல.

நீங்கள் ஒரு பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை எடுத்துக் கொண்டிருந்தால், உங்கள் உணவுப் பழக்கத்தில் ஆளி விதைகளை சேர்க்கும் முன்பு, சாத்தியமுள்ள மருந்து எதிர் வினைகளை பற்றி, ஆளி விதைகள், இரத்த சர்க்கரை அளவுகளைக் குறைப்பதாக அறியப்பட்டு இருப்பதால், குறிப்பாக சர்க்கரை நோயாளிகளாக இருக்கும் பட்சத்தில், உங்கள் மருத்துவரிடம் ஆலோசிப்பது எப்போதும் அறிவுறுத்தப்படுகிறது.

- K. **கலைமணி**

# உங்கள் அனைத்து தகவல்களையும் திருட முடியும்!

# பெண்களே ஜாக்கிரதை; சைபர் கிரைம் போலீஸ் எச்சரிக்கை!



குற்றம் என்பது சட்டத்துக்கு புறம்பான செயல்களை செய்வது. மனிதன் தோன்றிய காலம் முதல் பல்வேறு ஆயுதங்கள் உள்ளன. தற்போது டிஜிட்டல் துறை ஆயுதமாக உள்ளது.

உங்களுடைய அனைத்து தகவல்களையும் திருட முடியும். சமூக வலைதளங்களில், எதை பதிவிறக்கம் செய்ய வேண்டும் என்பது முக்கியம். தொழில்நுட்பம் அசுரவேகத்தில் வளர்கிறது. ஆனால், அதற்கேற்றார் போல் நாம் இன்னும் வளரவில்லை

அந்த தொழில்நுட்பம் எப்படி, நம் தகவலை திருடுகிறது என்பது குறித்து அறிந்திருப்பதில்லை. குறிப்பாக பெண்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். நமது இ-மெயில் உள்ளிட்ட அனைத்துக்குமான கடவுச்சொல் எப்படி இருக்க வேண்டும் என, வரையறை உள்ளது. ஆனால், நாம் அதை பின்பற்றுவதில்லை.




நமது பிரத்யேக தகவல்களை யார் பார்க்க வேண்டும் என்பதை, நாம் தான் முடிவு செய்ய வேண்டும். தொழில்நுட்பம் கெட்ட விசயங்களுக்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இன்று அதிகளவில் முதியவர்கள் ஏமாற்றப்படுகின்றனர். சைபர் கிரைம் குறித்து, நமது தெரிந்த விசயங்களை முதியவர்களுக்கு சொல்ல வேண்டும். பெண்களுக்கு எதிரான சைபர் கிரைம்கள் அதிகம் நடக்கின்றன

சொல்லப்பட்ட குற்றங்களை விட, சொல்லப்படாத குற்றங்களே அதிகம். பயம் கூடாது. நமது தனிப்பட்ட தகவல்களை ஒரு போதும், பகிரக்கூடாது. அனைத்தையும் பாதுகாப்புடன் கையாள வேண்டும். நம்பிக்கையில்லாத இணையத்தளத்தில், நம் தகவல்களை பகிரக்கூடாது. அறிமுகமில்லாத எண்களில் இருந்து வரும் வீடியோ அழைப்புகள், தகவல்களை நம்பி, அவற்றை பின்தொடரக்கூடாது.

ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு கிடைக்கும். அதை பயன்படுத்தி உயர வேண்டும். பெண்கள் சமையலறையில் முடக்கப்பட்ட நிலை மாறி, இன்று அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றனர். உங்களுக்குள் தலைமை பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். எந்த திறன் உங்களிடம் உள்ளதோ, அதை வெளிப்படுத்தி, வெற்றி பெற வேண்டும்.

- R. ஹரிகிருஷ்ணன்

# தமிழ் வளர்ச்சிக்காக திமுக என்ன செய்தது?

## அன்புமணி ராமதாஸ் குற்றச்சாட்டு!




தமிழை வைத்து அரசியல் செய்யும் திமுக, இதுவரை தமிழ் வளர்ச்சிக்காக என்ன செய்தார்கள் என்று அன்புமணி கேள்வி எழுப்பினார்.

சேலத்தில் நடைபெற்ற ஜி.கே.மணி இல்ல திருமண விழாவில் மருத்துவர் ராமதாஸ் மற்றும் அன்புமணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

விழாவில் மருத்துவர் அன்புமணி வாழ்த்துரை நிகழ்த்தினார்.

அப்போது, தமிழகத்தில் புதிய அரசியல் பிரச்னையாக மொழி பிரச்னை அதிகம் பேசப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் தேசிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் நிதி வழங்க முடியும் என்று மத்திய அரசு கூறுவது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது, அது தவறு என்றார்.

மத்திய அரசுக்கு மும்மொழி கொள்கை, திமுகவிற்கு இரு மொழி கொள்கை உள்ளது. ஆனால் பாமகவிற்கு ஒரு மொழி கொள்கைதான். எனவே தாய் மொழியை போற்றி வளர்ப்போம் என்று கேட்டுக்கொண்டார்.

நோபல் பரிசு பெற்றவர்களில் 90 விழுக்காட்டினர் சொந்த தாய் மொழி படித்து வந்தவர்கள் தான் என சுட்டிக்காட்டிய அன்புமணி, தமிழகத்தில் தமிழ் மொழியை காக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.தமிழை வளர்க்க பாமக நிறுவனர் ராமதாஸ் அரும்பாடு பட்டு பல போராட்டங்களையும், நிகழ்சிகளையும் நடத்தினார்.

மக்கள் தொலைக்காட்சி தொடங்கிய பின்னர் தான் தமிழில் உள்ள வார்த்தைகள் பிற ஊடகங்கள் பயன்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் 45 சதவிகிதம் மட்டுமே அரசு பள்ளி உள்ளது. அரசின் கடமை கல்வியை இலவசமாக வழங்க வேண்டும் என்பது ஆனால் கடந்த 58 ஆண்டுகளில் 55 ஆயிரம் தனியார் பள்ளிகள் தமிழகத்தில் ஊடுருவி உள்ளது என்றார்.

அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் பாமக பங்கேற்கும்

மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பால் தமிழ்நாட்டுக்கு ஏற்படவுள்ள பாதிப்புகள் குறித்து விவாதிக்கவும், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்க மார்ச் 5 ஆம் தேதி நடைபெறும் அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் பாமக பங்கேற்கும்.

**தமிழ் வளர்ச்சிக்காக திமுக என்ன செய்தது?**

தமிழை வைத்து அரசியல் செய்யும் திமுக, இதுவரை தமிழ் வளர்ச்சிக்காக என்ன செய்தார்கள் என்று அன்புமணி கேள்வி எழுப்பினார்.

எந்த மாநிலத்திலும் மொழியை திணிக்கக் கூடாது. தமிழகத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை ரூ. 4 லட்சம் கோடியாக உள்ளது. இதில் கல்விக்காக ரூ.45 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

**மத்திய அரசுக்கு உரிமை கிடையாது**

தேசிய கல்விக் கொள்கையை ஏற்பதும் ஏற்காமல் இருப்பதும் மாநில அரசின் உரிமை. தமிழகத்தில் ஒரு கொள்கையை மாற்றச் சொல்ல மத்திய அரசுக்கு உரிமை கிடையாது.

மேலும் தேசிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் நிதி வழங்கப்படும் என்று மத்திய அரசு கூறுவதை ஏற்க மறுக்கும் தமிழக அரசு, அந்த நிதி தமிழகத்திற்கு வேண்டாம் என ஒதுக்க வேண்டியது தானே என்றார்.

**- துர. சந்துரு**

# அஷ்டலட்சுமிகள் பற்றிய விளக்கம்



அனைத்து விதமான நலன்களையும் வழங்குவதற்காக தான் லட்சுமி தேவி, எட்டு வடிவங்களில் அஷ்ட லட்சுமிகளாக நமக்கு அருள் செய்கிறாள். ஆனால் செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமியை மட்டும் தான் நம்முடைய வீட்டிற்கு வர வேண்டும், நமக்கு அருள வேண்டும் என அனைவரும் நினைக்கிறோம். மற்ற நலன்களுக்கும் காரணமான லட்சுமிகளை யாரும் தனியாக அழைப்பதில்லை. காரணம், மகாலட்சுமி வந்தாலே அவருடன் மற்ற லட்சுமிகளும் வந்து விடுவார்கள் என்பது நம்பிக்கை.

**கஜலட்சுமி:**

நான்கு கரங்களுடனும், அதில் இரு கைகள் தாமரை மலரை ஏந்த, ஒரு கரம் உன்னதமான அபய முத்திரை அளிக்க நூற்றெட்டு இதழ்த் தாமரை மலரில் வசிப்பவள். வெளுத்த திருமேனி இவளுடையது, பேரொளிப் பிழம்பு என விளங்கும் பேரழகு கொண்டவள், பலவகைப்பட்ட அணிமணிகளும் பூண்டு தூய ஆடையும் அணிந்தவள். இவளின் இருபுறங்களிலும் சாமரமேந்தித் தோழியர் பணி செய்யப்பட்டாடை புனைந்து அது அவளது திருவடிகள் வரை தொங்கும். இதுவே கஜலட்சுமியின் திரு அம்சமாகும்.

**ஆதிலட்சுமி:**

பொன்னான இரு கைகளை உடையவளும் இருவகைப்பட்ட பொலிவும், நல்ல அழகும், கருணை பொழியும் அருட்கண்களை உடையவளும், அபய கரமுள்ளவள். பூமாலை அணிந்தவள், என்றும் சிறந்த தாமரை மலரில் வசிப்பவள். குறைவில்லாத அணிகலன்கள் பலவகைகளை அணிந்தவள். சகல விதமான கலை இலக்கணங்களின் எல்லையாக விளங்குபவள். பேரொளிப்பிழம்பை உடையவள். தங்கம் போன்று ஜொலிக்கும் சிவந்தபட்டை அணிந்தவள். தனது இருபுறத்தைச் சுற்றிலும் அழகுவெள்ளம் சூழ்ந்து பெருகக்காட்சியளிப்பவள், சக்தியின் திருநாவத்தை உடையவளும், அழகுக்கெல்லாம் அழகு செய்பவளும் மூலமுதலான ஆதிலட்சுமியே ஆவாள்.

**சந்தானலட்சுமி:**

எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுபவளும், தலையில் பின்னலாகிய சடைகளை உடையவளும், வெள்ளைத் தாமரையில் அமர்ந்து வீற்றிருப்பவளும், தன் இருபுறமும் தீபம், சாமரம் இவைகளுடன் பணிப்பெண்கள் அணிவகுத்து நிற்க, இராஜமரியாதையுடனும், அபய கரத்துடனும், இருகரங்களில் நிறைகுடம் ஏந்தியவளும், கருணையே வடிவாகவும் உள்ளவள் இதுவே சந்தான லட்சுமியின் திருஅம்சமாகும்.

**தனலட்சுமி:**

மனதிற்கு இனியவளும், கிரீடம் அணிந்தவளும், தங்கத்தைப் போன்று தகதகக்கும் பேரொளியைத் தன்னகத்தே கொண்டவன், சோம்பல் இல்லாமல் தன் உண்மையான உழைப்பினால் செல்வம் தேடுபவர்களுக்கு கருணையளிப்பளும், பலவிதமான அணிமணிகள் அணிந்தவளும், வலது கையில் நிறைகுடம் ஏந்தி, இடது கையில் சக்கரம், அம்பு, தாம்பூலம், சங்கு,

தாமரை, மணிமாலை இவைகளுடனும், மாலையும், கஞ்சுகமும் அணிந்தவள் தனலட்சுமி.

**தானியலட்சுமி:**

எப்போதும் அருளைச் செய்கிற அபய கரம் உடையவளும், தங்கத்தைப் போல் ஒளி பரவச்செய்கிற கிரீடம் அணிந்தவளும், தாமரை, கரும்பு, நெற்கதிர், வாழைப்பழம், கலசம் முதலியவை களை கரங்களில் உடையவளும், வலது கையில் தாமரை மலரை ஏந்தியவளும், கருணையே வடிவாக வெண்மை நிறத்தையுடையவளும், தலையில் சடைகள் பின்னி அணிந்தவளும், ஏல்லா விதமான ஆடை, அணிவணிகளை அணிந்து உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து பெருமையுடன் ஆனந்தம் மேலோங்கியவளும் மனதைக் கவரும் பேரழகு கொண்டவளும் ஆகிய தானிய லட்சுமியை வணங்குவோம்.

**விஜயலட்சுமி:**

உலகங்களுக்கெல்லாம் தலைவியானவளும், என்றும் வெற்றியெல்லாம் தருபவளும், எட்டு கரங்களை உடையவளும், உயர்ந்த சிம்மாசனத்தில் வீற்றிருப்பவளும், கருப்பு நிறமுள்ள மேனியை உடையவளும், பேரழகுடனும் எல்லா வகையான அணிமணி ஆபரணங்களை அணிந்து, வலது கையில் கத்தி, பாசம், சக்கரம் பூண்டு, ஒரு கை அபயம் காட்ட, இடது கையில் அங்குசம், கேடயம், சங்கம் இவையுடன் ஒரு கையில் வரத முத்திரையுடன், வீரமும் கம்பீரமும் கொண்டு சாம்ராஜ்ய சக்ரவர்த்தியைப் போல வீற்றிருக்கும் திருக்கோலமே விஜயலட்சுமியின் இயல்பு ஆகும்.

**வீரலட்சுமி:**

எட்டுக் கைகளுடன் ஒப்பிலாத சிம்மாசனத்தில் அமர்ந்து, தலையில் ஒளிபொருந்திய பொன்னாலான கிரீடத்தை அணிந்தவளும், ஒரு திருக்கரத்தில் அபயமும் காட்டி, மற்றொரு திருக்கரத்தில் வரதமும் காட்டி மற்ற கரங்களில் வரிசையாக சக்கரம், அம்பு, சங்கம், வில், கபாலம் என்ற ஆயுதங்களைக் கொண்ட வீரலட்சுமியை வணங்கி பேரருள் பெறுவோம்.

**மஹாலட்சுமி:**

தாமரை மொட்டில் வீற்றிருப்பவளும், நான்கு கரங்களினாலும், இரு யானைகளால் வணங்கப்படுபவளும், தாமரை மலரின் இதழ்களைப் போன்று, சிவந்து காணும் கண்களை உடையவளும், அபய கரமும், வரதகரமும் பேரொளி செய்ய மேல் நோக்கிய இரு கரங்களில் தாமரை மலர் இலக, வெண்பட்டு அணிந்த, என்றுமே மனதிற்கு இன்பத்தை மட்டுமே தரும் ஸ்ரீ மஹாலட்சுமி தேவியை வழிபட்டு வாழ்வில் பேரானந்தம் பெறுவோம்.

- D. **பாமா**

# அமைச்சர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்து புறக்கணிப்பு:

## அண்ணாமலை கண்டனம்!

அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்டோர் பங்கேற்ற அரசு நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படாததற்கு தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில், “திருவள்ளூரில், திமுக அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பொன்முடி, நாசர் மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சி, தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படாமல் தொடங்கப்பட்டுள்ளது. சட்ட விரோதமானது. வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.



- A. **சரவணன்**

# தேசிய கல்விக் கொள்கை 2020 திறந்தவெளி பல்கலைக்கழகக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது:

## மத்திய அமைச்சர் திரு ஜிதேந்திர சிங்



ஜம்முவில் நடைபெற்ற இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழக மண்டல மையத்தின் 38-வது பட்டமளிப்பு விழாவில் காணொலி மூலம் உரையாற்றிய மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், பணியாளர், பொதுமக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தேசிய கல்விக் கொள்கை 2020-ன் மூலம் ‘திறந்தவெளிப் பல்கலைக்கழகக் கலாச்சாரம்‘ குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடையும் என்று தெரிவித்தார்.

கல்வித் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் இந்திரா காந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகம் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதாக அவர் குறிப்பிட்டார். குறிப்பாக சமூக-பொருளாதாரத் தடை காரணமாக முறையான கல்வி நிறுவனங்களை அணுக முடியாதவர்களுக்கு மாறுபட்ட கற்றல் வாய்ப்புகளை இது வழங்குவதாகவும் அவர் கூறினார். இதுபோன்ற திறந்த வெளிப் பல்கலைக்கழகங்களின் நோக்கங்களுடன் தேசிய கல்விக் கொள்கை 2020-ல் உள்ள முற்போக்கான அம்சங்கள் ஒத்துப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாடத்திட்டங்களை மாற்றுவதன் மூலமோ, தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் அவற்றை இணைப்பதன் மூலமோ, வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் மாணவர்கள் தங்கள் கற்றல் பாதைகளைப் பன்முகப்படுத்திக் கொள்வதில் தேசிய கல்விக்கொள்கையின் முக்கியத்துவத்தை அமைச்சர் எடுத்துரைத்தார்.

1985-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்திரா காந்தி தேசிய பல்கலைக்கழகம் மாணவர் சேர்க்கை மூலம் உலகின் மிகப்பெரிய பல்கலைக்கழகமாக மாறியுள்ளதாகவும், மேலும் ஏ++ அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

- S. ஜெயராஜ்

## தமிழகம் தவிர்த்து மற்ற மாநிலங்களும் மும்மொழிக் கொள்கையை ஏற்று செயல்படுத்தி உள்ளன:




1. கர்நாடகா: **மூன்றாவது மொழி தெலுங்கு, கொங்கனி, தமிழ், மலையாளம், சமஸ்கிருதம், ஹிந்தி.**

2. கேரளா: **மூன்றாவது மொழி தமிழ், கன்னடம், கொங்கணி, இந்தி, சமஸ்கிருதம்**

3.தெலுங்கானா: **மூன்றாவது மொழி மராத்தி, இந்தி, கன்னடம், சமஸ்கிருதம்**

4.ஆந்திரா: **மூன்றாவது மொழி ஒடியா, இந்தி, தமிழ், கன்னடம், சமஸ்கிருதம்**

5. பீகார்: **மூன்றாவது மொழி பெங்காலி, உருது, ஒடியா, சமஸ்கிருதம்.**

6. உத்தரப்பிரதேசம்: **மூன்றாவது மொழி பெங்காலி, பஞ்சாபி, பஹாடி, சமஸ்கிருதம்**

7.ஹரியானா: **மூன்றாவது மொழி பஞ்சாபி, சமஸ்கிருதம், பஹாடி**

8. ஹிமாச்சல்: **மூன்றாவது மொழி பஞ்சாபி சமஸ்கிருதம்**

9. மத்தியப்பிரதேசம்: **மூன்றாவது மொழி சமஸ்கிருதம், குஜராத்தி, மராத்தி**

10. சத்தீஸ்கர்: **மூன்றாவது மொழி சமஸ்கிருதம், ஒடியா, தெலுங்கு**

11.ஜார்கண்ட்: **மூன்றாவது மொழி பெங்காலி, ஒடியா, சமஸ்கிருதம்**

**இந்தி தாய்மொழியாக இல்லாத மாநிலங்களும் மும்மொழி முறையை அமல்படுத்தியுள்ளன.**

12. மகாராஷ்டிரா: **மூன்றாவது மொழி இந்தி, சமஸ்கிருதம், குஜராத்தி, தெலுங்கு, கன்னடம், கொங்கனி**

13. கோவா: **மூன்றாவது மொழி மராத்தி, கன்னடம், ஹிந்தி, சமஸ்கிருதம்**

**அனைத்து மாநிலங்களும் கற்பிக்க வேண்டிய பட்டியலில்**

**(1) தாய்மொழி**

**(2) ஆங்கிலம்**

**(3) அண்டை மாநில மொழி அல்லது ஹிந்தி, சமஸ்கிருதம் விருப்ப மொழியாக இருக்கலாம்.**

**மூன்றாவது மொழி இந்தியாகத்தான் இருக்க வேண்டும் எனும் அவசியமில்லை.**

**இந்தி அல்லது வேறு எந்த மொழியையும் அறியாததற்காக எந்த மாநிலமும், இனமும் அல்லது நபரும் ஒதுக்கி வைக்கப்படக்கூடாது.**

**மக்கள் தங்கள் விருப்பப்படி அதிக மொழிகளைக் கற்றுக்கொள்ளலாம். இதுவே மும்மொழி கல்விக்கொள்கை.**

**- அன்புமணி**

# மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் ஆட்சேர்ப்பு பயிற்சி மையத்தின் பெயர் மாற்றம்




அரக்கோணத்தில் உள்ள மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் (சி.ஐ.எஸ்.எஃப்) ஆட்சேர்ப்பு பயிற்சி மையம் (ஆர்.டி.சி) இனி ராஜாதித்ய சோழன் ஆர்.டி.சி தக்கோலம் என்று பெயர் மாற்றப்பட உள்ளது. 24.02.2025 முதல் இந்த மாற்றம் அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மன்னர் முதலாம் பராந்தகனின் மகனான சோழ இளவரசன் ராஜாதித்ய சோழன், தக்கோலம் போரில் (948-949) சோழப் படைகளுக்குத் தலைமை தாங்கினார் கி.பி 948-949 இல் நடந்த தக்கோலம் போரின்போது போர்க்களத்தில் ராஜாதித்யன் இறந்ததுடன், தக்கோலத்தில் சோழப்படை தோற்கடிக்கப்பட்டது.

ராஜாதித்ய சோழன் ஆர்.டி.சி தக்கோலத்தின் புதிய அலுவலக பெயர் மற்றும் முகவரி:

துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகம், ராஜாதித்ய சோழன் ஆர்.டி.சி, தக்கோலம் அஞ்சல் அலுவலகம்: சுரக்ஷா வளாகம், அரக்கோணம் வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம் (தமிழ்நாடு) அஞ்சல் குறியீடு - 631152.

- S. ராதிகா



# கதர் ஆடையை உலகம் முழுவதும் பிரபலப்படுத்துவதற்கான பிரச்சாரம்



காதி நிறுவனம் கதர் ஆடை அணியும் பழக்கத்தைப் பிரபலப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் “உலகை காதி அணியச் செய்வோம்“ பிரச்சாரம் நாட்டின் வளமான ஜவுளி பாரம்பரியத்தை உலகளவில் ஆடை வடிவமைப்புகளுக்கான தற்போதைய கலாச்சாரத்துடன் இணைந்து செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தப் பிரச்சாரம் விளம்பரத்துறையினர் மற்றும் தனிப்பட்ட முறையில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சவாலாக இருக்கும்.

வேவ்ஸ் எனப்படும் உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக, இந்த முயற்சி புதுமையான விளம்பரங்கள் மூலம் கதர் ஆடையை உலகம் முழுவதிலும் அனைவராலும் விரும்பி அணியும் வகையில், வர்த்தக முத்திரையுடன் நிலை நிறுத்த மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்துடன் இணைந்து இந்திய விளம்பர முகவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் போட்டிகள் உள்நாட்டு, சர்வதேச சந்தைகளில் இருந்து பங்கேற்பாளர்களை டிஜிட்டல், அச்சு ஊடகம், வீடியோ, அனுபவ வடிவங்களில் ஆக்கபூர்வமான கருத்துக்களை உருவாக்க அழைக்கிறது. சிந்தனைத் திறன், படைப்பாற்றலில் கவனம் செலுத்துவதன் மூலம், உலகிற்கான கதர் ஆடை என்ற வர்த்தக முத்திரையை மேம்படுத்தவும், நுகர்வோரை ஈர்க்கும் வகையிலும் உலகளவிலான புதிய யோசனைகளை முன்வைக்க ஊக்குவிக்கிறது.

மும்பையில் உள்ள ஜியோ சர்வதேச மாநாட்டு மையத்தில் 2025 மே 1-ம் தேதி முதல் 4-ம் தேதி வரை இந்த மாநாடு நடைபெறுகிறது. வேவ்ஸ் மாநாடு ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறைக்கு ஒரு முக்கிய நிகழ்வாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உச்சிமாநாட்டில் நான்கு பிரிவுகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்த மாநாட்டில் உலகை கதர் ஆடையை அணியச் செய்வோம் என்ற பிரச்சாரத்திற்கு வலு சேர்க்கும் வகையில், துறை சார்ந்த விளம்பர நிபுணர்கள் மற்றும் பகுதி நேர பணியாளர்களுக்கு அவர்களது படைப்பாற்றல் மற்றும் சிந்தனைத் திறனை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

- K. மாரிதுரை




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உலக மகளிர் தினத்தையொட்டி 08.03.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், 100 இளஞ்சிவப்பு நிற (Pink) ஆட்டோக்களை மகளிர் பயனாளிகளுக்கு வழங்கி, அவர்களுடன் உரையாடினார். - Ba. சரவணன்







## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: info@penakural.com, Web: www.penakural.com

UPI Number:
8754582123

# TAMILNI PRINTZ & GRAPHICS

**ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS**

DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION

DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER



WEBSITE DESIGN SERVICE



APPLY PAN CARD PASSPORT

ALL ONLINE SERVICE



DESIGN
MAGAZINE
NEWSPAPER

ADDRESS: 3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR,
CHENNAI - 600097, EMAIL: rsprintzy@gmail.com

PH.: 044-3590 6002 MOB.: 8754582123 / 9962245338

**PENA KURAL,** Tamil Monthly - March 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**

